விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை (20.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.


# யாழிற்கு இரணைமடுத் தண்ணீர்

# விவசாயிகளுக்கு இணக்கமில்லை

## நேற்றைய கூட்டத்தில் முடிவில்லை

**இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நலன்கள் குறித்து கவனம் செலுத்தப்படாவிட்டால், யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போவதில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**





விவசாயிகளின் உடன்பாடு இல்லாத காரணத்தினால் இரணைமடுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான நிதியைப் பெறுவதில் சிக்கல் ஏற்படுகின்ற நிலை உருவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சியில் நேற்றுச் சனிக்கிழமையன்று நடைபெற்ற முக்கிய கூட்டம் ஒன்றில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளும் ஊர் முக்கியஸ்தர்களும் இரணைமடுக்குளத்தின கிளிநொச்சி -யாழ்ப்பாணம குடிநீர் விநியோகத் திட்டத்தில் தமக்கு ஏற்படவுள்ள பாதிப்புக்கள் மற்றும் சந்தேகங்கள் குறித்து வட மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், முக்கியஸ்தர்களிடம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனை அதிகாரி எஸ்.எம். குரூஸ் மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் இரணைமடுக்குளத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான 23-ம் பக்கம் பார்க்க

## இ.போ.ச கட்டணமும் நவம்பரில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களுக்கான கட்டணமும் 7 சதவீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

இந்த கட்டண அதிகரிப்பு நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது என்றும் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, தனியார் பஸ்களுக்கான கட்டணத்தையும் ஏழு சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (எ-11)

## மாங்குளத்தில் பௌத்த தூபி

(கிளிநொச்சி)

மாங்குளத்தில் பௌத்த தூபி ஒன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள இத்தூபி, கிளிநொச்சி பாதுகாப்பு தலைமையகத்தில் முழு ஆதரவோடு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இங்கு நீண்டகாலமாக புத்த வழிபாடு 23-ம் பக்கம் பார்க்க

# இராணுவத்துக்கு இடவசதி இருந்தால் வடக்கில் இருந்து வெளியேற்றுவோம்!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

இராணுவத்துக்கான இட வசதிகளையும் வாழ்வாதார வசதிகளையும் அரசாங்கம் பெற்றுத்தருமானால் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவோம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

வட மாகாணத்தில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றும் அதிகாரம் சர்வதேசத்திற்கு இல்லை. எம்து நாட்டில் பாதுகாப்பினை பலப்படுத்தும் அதிகாரம் ம்த்திய அரசாங்கத்திடமே உள்ளது எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் பெண்கள் பாதிக்கப்படுவது தொடர்பில் இராணுவம் பொறுப்புக் கூற முடியாது. எமது கடமை மக்களை பாதுகாப்பதே தவிர சீரழிப்பதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றுவதில் சில



அமைப்புகளும் வடக்கின் கட்சிகளும் சர்வதேச அமைப்புகளும் மும்முரமாக செயற்படுகின்றன.

இலங்கையில் இன்று அமைதியானதொரு சூழலினை ஏற்படுத்தியதில் இலங்கை இராணுவத்தினரே முக்கிய பங்கு வகிக்கின்றனர். இவை இலங்கையர்களுக்கு மட்டுமே தெரியும்.

வடக்கில் இராணுவக் குற்றங்கள் நடந்ததாகக் கூறியே இன்று எமது நாட்டின் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர்.

ஆனால், வடக்கில் பொதுமக்களின் இழப்புகளை விடவும் அதிகமாக எமது இரா 23-ம் பக்கம் பார்க்க

## மன்மோகன் கலந்துகொள்வார் நம்பிக்கையில் இலங்கை அரசு



கொழும்பில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வருகை தருவார என்ற எதிர்பார்ப்பு தமக்கு இன்னமும் இருக்கிறது என இலங்கை வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இம்மாநாட்டில் இந்தியப் பிரதமர மன்மோகன் சிங் பங்கேற்க மாட்டார் என்று புதுடில்லி அரசாங்க வடாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே, இலங்கையின் வெளி விவகார அமைச்சு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதேவேளை, பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பதவி இலங்கைக்கு வழங்கப்படக் கூடாது என போர்க்கொடி தூக்கியுள்ள சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் மீது இலங்கை கடும் சீற்றம் வெளியிட்டுள்ளது.

கனடாவிலுள்ள புலம்பெயர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் நிதி உதவி வழங்கிய அமைப்பு என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பதவியை இலங்கைக்கு வழங்கக்கூடாது என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை என்பன வலியுறுத் 23-ம் பக்கம் பார்க்க

## அத்துமீறும் சிங்கள மீனவர்கள்; கொக்கிளாய் மீனவர் திண்டாட்டம்

முல்லைத்தீவு கொக்கிளாய் கடனீரேரி பிரதேசத்தில் அத்துமீறி கடற்றொழிலில் சிங்கள மீனவர்கள் ஈடுபட்டுவருவதாக தெரிவித்திருக்கும் பிரதேச கடற்றொழிலாளர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்த விடயத்தில் அதிகம் அக்கறை செலுத்தவேண்டும் எனவும் கேட்டிருக்கின்றனர்.

மேற்படி கடனீரேரி பகுதியில் இலங்கையில் தடைசெய்யப்பட்டிருக்கும் கூட்டுவலை உள்ளிட்ட வலைகளையும், தடைசெய்யப்பட்ட கடற்றொழில் முறைகளையும் பயன்படுத்தி சிங்கள மீனவர்கள் கடந்த பல வருடங்களாக தொழில் செய்து வருகின்றனர்.

இதனால் இந்தப் பிரதேசத்திற்குள் தமிழ் மீனவர்கள் செல்ல முடியாத நிலைகாணப்படுவதுடன், கடல்வளம் மிக வேகமாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் நேற்று அதிகாலை பிரதேச மக்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனை பிரதேசத்திற்கு 23-ம் பக்கம் பார்க்க

## நவம்பர் ஐ.நா அமர்வில் இலங்கை விடயம் இல்லை

நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஐ.நாவில் நடைபெறவுள்ள 17-வது பூகோள கால மீளாய்வுக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி அட்டவணையில் இலங்கை விடயங்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை.

இம்முறை கால மீளாய்வுக் கூட்டத்தொடரில் செனகல், நைஜீரியா, சீனா, மெக்சிக்கோ, கொங்கோ, சாட் உள்ளிட்ட சில நாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளன.

இந்த நாடுகளின் 24-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேரர்களுக்கு எதிராக 19 யோசனைகள்; ரணிலின் மீது ஆதரவாளர்கள் அதிருப்தி

தேரர்களுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள 19 யோசனைகளுக்கு ஆதரவாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரை சந்தித்த சந்தர்ப்பத்தில், 19 விடயங்கள் அடங்கிய ஆவணமொன்றை சமர்ப்பித்துள்ளதாக ஞாயிறு மவ்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த வியத்தகு யோசனைகள் அடங்கிய ஆவணம் இம்முறை ஞாயிறு மவ்பிம பத்திரிகையின் "கெபினட் 01" என்ற தலைப்பில் அரசியற் பகுதியில் வெளியாகியுள்ளதாக ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஞாயிறு மவ்பிம பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, ஐக்கிய பிக்குகள் முன்னணி முன்வைத்துள்ள 8 யோசனைகளுக்கு ஈடாகவே, ரணில் விக்கிரமசிங்க 19 விடயங்கள் அடங்கிய ஆவணத்தை சமர்ப்பித்துள்ளார்.

இந்த யோசனைகளுக்கு அமைய, உத்தேச தலைமைத்துவ குழுவினால் தொகுதி அமைப்பாளர்கள் நியமனம், வேட்புமனு சபையை நியமித்தல் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்யும்போது முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில், கட்சியின் தலைவருடன் ஆராய்ந்தன் பின்னரே செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, தலைமைத்துவ குழுவின் யோசனைகள் செயற்குழுவிற்கு காலத்திற்கு காலம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற யோசனையும் இதில் அடங்குவதாக மவ்பிம பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிக்குகள் முன்னணி சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு அமைய, தலைமைத்துவ குழு நியமிக்கப்பட வேண்டுமெனவும், ரணில் விக்கிரமசிங்கவின் அந்த யோசனைகளுக்கான பதில் தேரர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேரர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அந்த 19 யோசனைகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

# அமைச்சர் பீரிஸ் மலேசியா பயணம்

பொதுநலவாய உச்சிமாநாடு அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மலேசியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அவர் மலேசிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயத்தின்போது வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகமவும் செல்லவுள்ளார்.

இதேவேளை பொதுநலவாய மாநாட்டில் மலேசியா பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

# இலங்கைப் பொருளாதாரத்தில் சீனப்பங்களிப்பு குறித்து ஆராய்வு

சீன வர்த்தக அமைச்சின் சர்வதேச வர்த்தக விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் யூ ஜியன்குவ தலைமையிலான சீனப் பிரதிநிதிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் சீனாவின் பங்களிப்பு குறித்து இருதரப்பினரும் ஆராய்ந்துள்ளனர்.

இதன் போது பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தால் மேற்கொளளப்படும் முயற்சிகளை பாராட்டிய சீன அமைச்சர், அரசாங்கத்தால் மேற் கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தமது நாடு முழு ஆதரவு வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளபல பத்தாண்டுகளாக பேணப்பட்டு வருவதாக குறிப்பிட்ட சீன அமைச்சர், குறிப்பாக 1952ஆம் ஆண்டில் மேற்கொள்ளபபட்ட இறப்பர் - அரிசி உடன்படிக்கை எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-11)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள் - அன்பளிப்பு பொருட்கள் - உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-5215)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்



அன்புடையீர்,
கடந்த 20.09.2013 வெள்ளிக்கிழமை எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சிவபதம் அடைந்த எமது சகோதரன்

அமரர்

### கிருஸ்ணநாதன் ராகுலன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 18.10.2013 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

கல்திட்டி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(4316)
இங்ஙனம்
குடும்பத்தினர்


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் கிளிநொச்சி

நீங்கள் எதிர்பார்ப்பது கௌரவமான நிரந்தர தொழிலா? உங்கள் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய மாதாந்தம் ரூபா 60000.00 உழைத்து எதிர்கால வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்ள அருமையான தொழில்வாய்ப்பு (Excutive) யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு சந்தைப் படுத்தல் துறையில் அக்கறையுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்களும் நிரந்தர (தொழில்) வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் 18-30 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

**077 727 4795 / 021 568 6466**

73, St.Annes Church Road, Chundikuly, Jaffna.

**Spoken English at Jaffna.**
**RAM : 072 200 8022** (வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.)

(சி-5233)

## இலவச அழகு கலை பயற்சி

* நிபந்தனைக்குட்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் 590/- பதிவுக் கட்டணத்துடன்

Facial, Gold Facial, Fruit Facial, Eye brow Shape, Pedicure, Manicure, Nail Art, Hair Style, Hair Cut, Hair Curling, Hair Ironing, Pimple Treatment, Bridal Make up என இன்னும் பல செய்முறை விளக்கத்துடன் 1 மாதம், 3 மாத பிரிவுகளாக நடைபெற்று பயிற்சி முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Saree Blouse, shalwar, Blouse போன்ற தையல் பயிற்சிகளும் Cake Icing பயிற்சிகளும் நடாத்தப்படுகின்றன.

கிளிநொச்சியில் : 26.10.2013 அன்று 10.00 மணிக்கு...
யாழ்ப்பாணத்தில் : காலம் : 22.10.2013 நேரம் : காலை 10.00 மணிக்கு
இடம் : 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச்சந்தி அருகாமை)

முகப்பரு, கரும்புள்ளி, கண்கருவலையம், பித்தவெடிப்பு, முடி உதிர்வு, பொடுகு, உடல் எடை குறைய, ஒட்டிய கன்னங்கள் குண்டாக மாற, முகம் பிரகாசமடைய போன்ற பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கிரீம், பால்மா விற்பனைக்குண்டு.

(4315) தொடர்புகளுக்கு : **0778848666, 0772288243**

## காணி குத்தகைக்கு தேவை

புதுக்குடியிருப்பு நகரத்தை அண்டிய பிரதேசத்தில் வீதியோரமாக நீண்ட காலக் குத்தகைக்கு காணி தேவை.

**தொடர்பு:- 077 482 9000**

(சி-5235)

## வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் இல.108 A இல் 3/4 பரப்புக் காணியில் மூன்று பக்க மதில், கிணறு (பங்கு) மூன்று அறையுடன் குசினி, விறாந்தை, வெளி விறாந்தையுடன் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு T.P.No: 0750393986

(4311)

## உலக நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகை



* 220 ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
* சகல நாடுகளுக்கும் 3 - 5 வேலைநாட்களில் சேவை
* மிக குறைந்த கட்டணம் மிக விரைவான சேவை.

வாடிக்கையாளர்களுக்கான விசேட சலுகை U.K. 3Kg பொதிக்கு 2700/= ரூபா மட்டுமே

பல நாடுகளுக்கு கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன



கிரிஷான் Worldwide Courier Service
499/1, பருத்துறை வீதி, நல்லூர், (நல்லூர் கோவில் முன்பாக)
Hot Line: +94770569642, +94770166746

(சி-5231)

## DHL EXPRESS வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவு!!!

- 11kg, 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு DHL இனால் வழங்கப்படும் விசேட விலைக்கழிவினை பெற்றுக்கொள்ளலாம்.
- சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்



3 தொடக்கம் 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி (கனகபுரம் பஸ்தரிப்பிடத்தில் இருந்து 100 மீற்றர் இடைவெளியில்)
TCN Express
இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

இல. 5, திருநகர் வீதி, கிளிநொச்சியில் இருந்து தற்பொழுது இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது (திருமுருகன் கொம் நெற் இன் சகல சேவைகளும் புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது)

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION
MMBL Money Master
46, Adiyapathum Veethy, Thirunalvely.

(சி-5232)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாசகம் கேட்பவர்களுக்கு தொழில் வழங்க நீண்டகால திட்டம்

## சமூக சேவைகள் அமைச்சு

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை முன்னிட்டு, கொழும்பு வீதிகளில் உள்ள யாசகம் கேட்போர் அனைவரையும் வெளியேற்றுவதற்கு பொலிசாருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

யாசகம் கேட்போர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்படினும் அவர்கள் மீண்டும் அத்தொழி லுக்கே வந்து விடுகின்றனர். இதனை நிறு த்த நீண்டகாலத் திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மேலும் தெரிவிக்கையில், முன்னரெல்லாம் மத ஸ்தலங்களில் பிச்சை யெடுப்பார்கள்.

இதனால் பொதுமக்களுக்கு பெரிதாக அசௌகரியங்கள் காணப்படுவதில்லை. ஆனால், இன்று அதனை மீறி நடு வீதியில் இறங்கி வாகனங்களின் கதவுக ளைத் தட்டி பிச்சை கேட்கின்றனர்.

இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதோடு பொதுமக்கள் அசௌகரியங்களுக்குமுள்ளாகின்றனர். அதுமட்டுமல்லாது, வாகன விபத்துகளும் ஏற்படுகின்றன.

இதனை கருத்திற் கொண்டும் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டை முன்னிட்டு சமூக சேவைகள் அமைச்சு, பொலிசாருடன் இணைந்து யாசகம் கேட்போரை கொழும்பிலிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

குறித்த மாநாட்டை முன்னிட்டு மட்டுமல்லாது, யாசகம் கேட்போர்களை நாடு முழுவதிலுமிருந்து வெளியேற்றி புனர்வாழ்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.அதுமட்டுமல்லாது, ஒப்பந்த அடிப்படையில் யாசகம் கேட்போர்களை அத்தொழிலில் ஈடுபடுத்தும் குழுக்களும் இயங்குகின்றன.

எனவே, நாடு முழுவதிலும் யாசகம் கேட்பதைத் தடுத்து அவர்களுக்கு மாற்றுத் தொழில்களையும், புனர்வாழ்வையும் வழங்க நீண்ட கால திட்டமொன்றை அமைச்சு தயாரித்துள்ளது. இதனை பாதுகாத்து அமைச்சுடனும் அதன் கீழ் இயங்கும் அரச சார்பற்ற நிறுவ னங்களுடன் இணைந்தும் முன்னெடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# தமிழியல் விருது வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பில்

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கவிஞர் எருவில்மூர்த்தி தமிழியல் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 2012,2013 ஆம் ஆண்டுக்களுக்கான தமிழியல் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

2012 ஆம் ஆண்டுக்கான தமிழியல் விருது வழங்கும் நிகழ்வுக்கு பேராதனைப் பல்கலைக்கழக உளவியல் மற்றும் மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி பூ.லக்ஷ்மன், கௌரவ விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், சிறப்பு விருந்தினராக மதுரை காமாராஜர் பல்கலைக்கழக இலங்கைப் பணிப்பாளர் சோ.திருச் செல்வம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)

## அறிவக திறப்பு விழா

(கரணவாய்)

விபுலானந்த சனசமூக நிலைய அறிவகத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கே.லோகேஸ்வரன் தலைமையில் கரணவாய் தெற்கு ஜே/348 விபுலானந்த சனசமூக நிலையத்தில் திறக்கப்படவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை தவிசாளர் பி.வியாகேசு, சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்குபிரதேசசபைசெயலாளர்ரி.அன்னலிங்கம், கரணவாய் தெற்கு கிராம அலுவலர் கே.ரி.புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2-60)

# வாரம் ஒரு தகவல்

## முதலும் முடிவும்

"சேர். உங்களிடம் ஒரு யோசனை கேட்க வேண்டும்."

"என்னிடம் யோசனை கேட்க என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"உங்களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது அதனால்தான்!"

"சரி, கேளுங்க"

நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா, வேண்டாமா சேர்?"

"எப்படி இருந்தாலும் கல்யாணம் செய்துகொள்! நல்ல மனைவி வாய்த்தால் சந்தோசமாக இருப்பாய்! மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்!"

"அப்படியா சேர்?"

"ஆமாம். இது நான் சொல்லவில்லை. சோக்கிரட்டீஸ் தான் இப்படி சொல்லியிருக்கிறார்."

"நான் ஞானியாக வேண்டும் என்று ஆசைப்படவில்லை சேர்?"

"அப்படியானால் மனைவியை நேசிக்கக் கற்றுக் கொள்"

"அது எப்படி"

"ஒருவனுக்குத் தன் மனைவியின் பழக்கவழக்கங்களில் ஏதேனும் ஒன்று பிடிக்கவில்லையெனில் அதற்காக அவளை அவன் வெறுத்தலாகாது. அவற்றுள் அவனுக்குப் பிடித்த ஒன்றை நினைத்து அவன் அவளை நேசிக்கட்டும் என்கிறார் நபிகள் நாயகம் (ஸல்)."

சான்றோர்களின் சிந்தனைகளைக் கூறியதற்கு நன்றி சேர். இது சம்பந்தமாக உங்களுடைய சொந்த சிந்தனையை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

"என்னைப் பொறுத்தவரை குடும்பத்தில் கணவன் - மனைவிக்குள் சண்டையே வரக்கூடாது. அதுதான் நல்ல குடும்பம்"

"உங்கள் குடும்பத்தில் சண்டையே வந்ததில்லையா?"

"எனக்கு கல்யாணமாகி 20 வருடத்தில் இதுவரைக்கும் ஒரு தடவைதான் சண்டை வந்திருக்கு. அதுவும் கல்யாணம் ஆன புதிதில்!"

"அதற்குப்பின் வரவேயில்லையா?"

"வருவதற்கு சான்சே இல்லை!"

"ஏன்?"

"அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

20.10.2013
(ஐப்பசி 03, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துதியை முழுவதும்
பரணி பின்னிரவு 4.57 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** உடன் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், பணியில் சில மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, சயன சுகக் குறைவான நாள், முயற்சிகள் தாமதமாகும்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், உறவினர் வருகையுண்டு, எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், பிறர் உதவியுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிங்கம்** தேகரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை ஏற்படும், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், ஆதாயம் தரும் பயணங்கள் ஏற்படலாம்.

**கன்னி** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடும், கௌரவக் குறைவான நாள், பிரயாண பயமுண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்** திட்டமிட்ட பயணங்கள் கைகூடும், அபூர்வ சந்திப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் கூடும், உறவினர்கள் வலிய வந்து உதவி செய்வர்.

**விருச்சிகம்** மனக்குழப்பங்கள் அகலும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், நோய்கள் குணமாகும், புதிய பொருட்களை வாங்குவதில் பிரியம் காட்டுவீர்கள்.

**தனுசு** நீண்ட நாளைய கனவுகள் நனவாகலாம், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சொத்துக்களால் ஆதாயமுண்டு, புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

**மகரம்** சுப செய்திகள் வந்து சேரலாம், பயந்த சுபாவமுண்டு, பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தேவையற்ற சஞ்சலங்கள் கூடும்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்ப பொறுப்புகள் கூடும், அந்நியர் சந்திப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** உங்கள் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், குடும்பக் கவலை ஏற்படலாம், இறை சிந்தனை மேலோங்கும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100-120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 120 |
| தக்காளி | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 50 | 80 | 70 |
| கரட் | 50 | 80 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 45 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 160-180 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 70 |
| பயற்றங்காய் | 110 | 110 | 100 |
| லீக்ஸ் | 90 | 140 | 100 |
| பீற்றூட் | 10 | 15 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 110 | 160 |
| போஞ்சி | -- | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 25 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளுத் தவறணையை இடம் மாற்றுங்கள்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி வடக்கு ஆலங்கட்டைப் பொது மயானத்தை அண்மித்த இடத்திலுள்ள கள்ளுத் தவறணையை அகற்றுமாறு அப் பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விளையாட்டு மைதானம், குடியிருப்புக்கள், வியாபார ஸ்தாபனங்கள், கல்வி நிலையங்கள் அமைந்துள்ள இப் பகுதியில் மேற்படி கள்ளுத் தவறணை அமைந்துள்ளதால் பலரும் அசௌகரியங்ளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி கள்ளுத் தவறணையைப் பயன்படுத்துவோர் அவ் வீதிகளில் அநாகரிகமான வார்த்தைகளைப் பிரயோகிப்பதுடன் அநாகரிக செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு இப் பகுதியிலிருந்து இத் தவறணையை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-7-60)







# பனை மரங்களை ஆதாரமாக கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம்

## விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு, அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்துக்கு இயற்கை அளித்த மிகப்பெரும் கொடை பனைவளம். அந்தப் பனை மரங்களை ஆதாரமாகக் கொண்டு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தால் நாம் எவரிலும் தங்கி வாழவோ அல்லது எவருக்கும் அடிபணிந்து வாழ வேண்டிய அவசியம் இல்லை என்று விவசாய அமைச்சர் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.



கொழும்பு வெள்ளவத்தை றோட்டரக்ற் கழகம் முன்னெடுத்துள்ள இலங்கையில் ஒரு இலட்சம் பனைமரக் கன்றுகளை நடும் திட்டத்தின் தொடக்க வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை சிறுப்பிட்டியில் இடம்பெற்றது. இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பனைமரங்கள் இலங்கையில் தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கிலேயே அதிகளவில் காணப்படுகின்றன. இங்கு ஏறத்தாழ 11 மில்லியன் பனைமரங்கள் உள்ளன. இவற்றில் 9.5 மில்லியன பனைமரங்கள் வட மாகாணத்தில் வளர்ந்துள்ளன.

உலகில் அதிகளவு பனைமரங்கள் இந்தியாவிலேயே உள்ளன. தமிழ்நாட்டில் 50 வீதத்திற்கும் அதிகமான பனைமரங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் பனை மரம் தமிழ மக்களுக்கான தேசிய அடையாளம். வரண்ட வலயமான எமது பிரதேசத்தில் பெருங் காடுகள் இல்லாத குறையைப் போக்குபவையும் இந்தப் பனங்கூடல்கள்தான். ஆனால், சூழலியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த இந்தப் பனை வளத்தின் பயனை நாம் இன்னமும் முழுமையாக உணர்ந்து கொள்ளாது இருக்கிறோம்.

சகல நாடுகளும் தங்களது இயற்கைத்தாவர வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டே தமது தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகின்றன. ஆனால் நாம் பனை மரத்தை ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்குரிய மரமாக ஒதுக்கி வைத்துள்ளோம்.

உலகில் ஒரு மரத்தை ஒரு சமூகத்துக்குரிய மரமாக ஒதுக்கிய சிறுமை அநேகமாக தமிழர்களையே சாரும். இதனால் கற்பகதருக்களான பனை மரங்களின் பொருளாதாரப் பயனை இன்னமும் நாம் குறைந்தபட்ச அளவிலேனும் அறுவடை செய்யவில்லை.

இந்நிலை மாற்றப்படவேண்டும். பனைப் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் முகமாக அது தொடர்பான கல்வியையும், நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய தொழில் முறைமைகளையும் அறிமுகப்படுத்த வேண்டும். சமூகவேறுபாடுகள் அற்று எல்லோரும் இத் துறையில் ஈடுபடக்கூடிய நிலை உருவாக்கப் படவேண்டும்.

போரில் அதிகம் பாதிக்கப்பட்ட தாவரம் பனை வளம்தான். பதுங்கு குழிகளையும், காப்பரண்களையும் அமைப்பதற்கு வெட்டி வீழ்த்தியதிலும் எறிகணை வீச்சுகளிலும் ஏறத்தாழ 4.5 மில்லியன் பனைமரங்கள் அழிககபபட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போதும் பனை அழிப்புத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் அரச தரப்பினரின் ஆதர வோடு புதுக்குடியிருப்பில் மரக்காலை அமைப்பதற்காக 250 பனைமரங்கள் வெட்டி வீழ்த்தப் பட்டுள்ளன. இயற்கையிலேயே பனை எவரது கவனிப்பும் அற்று வளரக்கூடியதாக இருந்த போதும அது முளைதிறன் குறைந்த தொரு மரமாகும்.

நூறு பனைவிதைகள் நட்டால் அவற்றில் 35 விதைகளே முளைக்கின்றன. இதனால் இவ்வாறான பனைமர நடுகைத் திட்டங்களின் மூலமே இழந்த பனைவளத்தை நாம் ஈடுசெய்யமுடியும். வீதியோரங்களிலும் அரச காணிகளிலும் மாத்திரம் அல்லாது தரிசாக விடப்பட்டிருக்கும் தனியார் காணிகளிலும் இத திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சியில் வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் ப.சீவரத்தினம், றோட்டரக்ற் கழக உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டு பனம் நாற்றுகளை நாட்டி வைத்தனர்.

இதன்போது நட்ப்பட்ட ஆயிரம் பனை நாற்றுகளையும் பராமரிக்கும் பொறுப்பை வலி. கிழக்குப் பிரதேச சபை ஏற்றுக்கொண்டுள்ளது. (அ)

# யாழ்.இந்து கல்லூரி அரையிறுதிக்கு தெரிவு

(மானிப்பாய்)

யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினால் நடத்தப்படுகின்ற பொன்.விபுலானந்தா ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

19 வயது பிரிவு ஆண்கள் அணிகளுக்கான போட்டி யாழ்.இந்துக் கல்லூரிக்கும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கும் இடையில் நேற்று நடைபெற்றது. இதில் 49:17 என்று புள்ளிகள் அடிப்படையில் யாழ்.இந்து 32 புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அரைஇறுதிப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ளது. (அ-7-23)

# சுற்றுலா பயணிகளின் வருகை யாழில் அதிகரிப்பு


யாழ்ப்பாணத்திற்கு தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த வாரங்களைவிட இந்த வாரம் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த வாரத்தில் இரண்டு விடுமுறை நாட்கள் அலுவலக நாட்களின் இடையில் வந்தமையாலேயே தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் வருகை யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக நயினாதீவு, யாழ்ப்பாணம் நாக விகாரை, நல்லூர் ஆலயம், கீரிமலை, கந்தரோடை மற்றும் நிலாவரை என்று பல இடங்களிலும் நாளாந்தம் ஐம்பதுக்கும் மேற்பட்ட தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் பஸ் வண்டிகள் வந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

தென்னிலங்கை சுற்றலாப் பயணிகளின் வருகை காரணமாக யாழ்ப்பாணத்தின் மாம்பழம், திராட்சைப் பழம், பனாட்டு மற்றும் கருவாடு என பல பொருட்களுக்குமான தேவைப்பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)





வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயம் நேற்று முன்தினம் [illegible] திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் காரியாலய கட்டடத்தை திறந்து வைப்பதையும் மேடையில் அதிதிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1532

# ஆஸியின் புதிய விசா நடைமுறை குறித்து மன்னிப்பு சபை அதிருப்தி

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தற்காலிக பாதுகாப்பு விசா நடைமுறை, புகலிடக் கோரிக்கையாளர்களின் மனித உரிமைகளை உதாசீனம் செய்யும் வகையில் அமைந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் பேச்சாளர் கிரஹம் மெக்ரீகர் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில், புதிதாக ஆட்சி அமைத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் கடுமையான கொள்கைகளை பின்பற்றி வருகின்றது.

1998 ஆம் ஆண்டில் பிரதமர் ஜோர்ன் ஹோவார்ட் காலத்திலும், தற்காலிக பாதுகாப்பு விசா முறைமை அமுலில் இருந்தது. எனினும், இந்த விசா முறைமையானது புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளுக்கு புறம்பானது.

மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதனை விடவும் இந்த அரசாங்கம் கடந்த காலத் தவறுகளை மீள இழைத்து, புகலிடக் கோரிக்கையாளர்களை தண்டிக்க முனைப்பு காட்டி வருகிறது. இந்த வகையில் விசா வழங்கப்பட்ட பலர் உள ரீதியான பாதிப்புக்களுக்கு இலக்கா கியுள்ளனர் என்றார்.

இந்த தற்காலிக பாதுகாப்பு விசா, மூன்றாண்டுகளுக்கு அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கிய போதிலும், இதன்மூலம் நிரந்தரமாக பாதுகாப்பு பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லை என்றும் குடும்ப மீள் இணைவு அல்லது நிரந்தர குடியுரிமை போன்ற வாய்ப்புக்கள் இந்த வகை விசா வழங்கப்படுவோருக்கு கிடைக்காது எனவும் தெரிய வருகின்றது. (அ-2)

## மாநாட்டு நிலவரம் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் ஆராய்வு

நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இலங்கை நிலைமைகள் குறித்து கண்காணிப்பு நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை முன் னிட்டு, வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவி னர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

அந்தந்த நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில்பங்கேற்பதில் சிக்கல் கிடையாது என குறித்த புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குறித்த நாடுகளுக்கு அறிவித்துள்ளனர்.

மற்றுமொருதொகுதி வெளிநாட்டுப் புலனாய்வு அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுறது.

கொழும்பு கட்டுநாயக்க பிரதான வீதி, வெளிநாட்டுத் தலைவர்கள்தங்கும்ஹோட்டல்கள், முக்கிய நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள் உள்ளிட்டவற்றுள் சோதனைகள் இடம்பெறவுள்ளன. (அ-2)

STUDY IN MALAYSIA
at an AWARD WINNING INSTITUTION
Register Online at: www.spotadmission.com



NO TOEFL / IELTS
Study with Work
Approved by Ministry of Higher Education and National Accreditation Board (MQA)
www.lincoln.edu.my
LINCOLN UNIVERSITY COLLEGE
International Standard Education
We offer Diploma to Doctorate programs for O Level to PG Students in
Management (Diploma / BBA / MBA)
Medicine (MD)
IT / Computer Science
Multimedia & Creative Design
Hotel Management
Electrical & Electronic Engineering
Nursing
Medical Assistant
Pharmacy
Physiotherapy
Accounting
On the Spot Admissions 26th October 2013
Agents Welcome
(இ/5209)
Meet Mr. Himanshu Barthwal, Associate Regional Director, to find out more about studying at Lincoln University College, Malaysia.
Date: Saturday, 26th October 2013 Time: 12 pm - 5 pm Venue: Hotel Renuka, Colombo 3.
Email: himanshu@lincoln.edu.my
Student Registration: www.spotadmission.com Call: 0094 0778246666

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கிளி /அம்பிகை வித்தியாலயம்
கண்ணகிநகர், புன்னை நீராவி, தருமபுரம், பரந்தன்.



2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளைப் பெற்றதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 30 ஆவது இடத்தினையும் பெற்றுச் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த எமது பாடசாலை மாணவன்
**செல்வன் புஸ்பராசா கலைக்கீரன்**
அவர்களை கண்ணகி அம்மன் ஆசியுடன் பல கலையும் பெற்று வளமாக வாழ மனதார வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்.
(4312)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம் (C-5185)

(இ/5229)
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1967 இந்து (V)<br>நட்சத்திரம்:சதயம் 3<br>உயரம்:5'4"<br>கி.பா: 44, 1இல் செவ்.<br>தகைமை/தொழில்: Computer Engineering Course முடித்துள்ளார்.இந்தியாவில் (Restaurant Owner)<br>தொ.இ: B -1749 | பிறப்பு: 1968 இந்து (V)<br>நட்சத்திரம்:புனர்பூசம் 4<br>உயரம்:5'4"<br>கி.பா: 15.5, 2 இல் செவ்.<br>தகைமை/தொழில்: BA நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: G -1771 |
| பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'6"<br>கி.பா: 36.25, 1இல் செவ்<br>தகைமை/ தொழில்:O/L இத்தாலி PR<br>தொ.இ: B -1752 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்:திருவோணம் 2<br>உயரம் : 5'3"<br>கி.பா: 56<br>தகைமை/ தொழில்: BSc, Physiotheraphy<br>தொ.இ: G-1772 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகிணி, 8இல் செவ்<br>உயரம்: 180 cm<br>தகைமை/ தொழில்: A/L- Italy work permit<br>தொ.இ: B -1761 | பிறப்பு: 1989 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 165 cm<br>கி.பா: 14, 8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L, Senior Banking Assistant<br>தொ.இ: G -1775 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 17.5 இல் செவ்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L Swiss not PR<br>தொ.இ: B -1762 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்:திருவோணம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா: 51.25<br>தகைமை/ தொழில்: MBBS<br>தொ.இ: G -1780 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

குறைந்த கட்டணத்தில் 24 மணி நேர சேவை
Northern Central Hospitals
24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA
நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்
வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

சிறு நீர் தொகுதி சத்திர சிகிச்சை, கற்கள் அகற்றுதல் உட்பட (Urology)
அதி நவீன உபகரணங்கள் கொண்டு சிறு நீரக சத்திர சிகிச்சை நிபுணரால் உடலில் காயமேற்படாது கற்கள் அகற்றுதல் உட்பட சகல சிறு நீர்த்தொகுதி சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.
(இ/5214)

நரம்பியல் சிகிச்சை (EMG, EEG, Sleep Disorders)
நரம்பியல் நோய்களுக்கு மின்னியல் (EMG,EEG) பரிசோதனை மேற்கொள்ளப் படுவதுடன் நித்திரை குறைபாடுகளுக்கும் 24 மணி நேர (Sleepstudies) சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

லாபறஸ்கோப்பி (Laporoscopy)
நவீன கருவி மூலம் வயிற்றில் சிறு துழை யிட்டு இச்சத்திர சிகிச்கை சத்திர சிகிச்சை நிபுண்ர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.
நோயாளி உடனடியாகவே சத்திர சிகிச்சையின் பின்பு வீடு செல்லமுடியும்.

முறிவு தெறிவு , மூட்டுக்கள் சத்திர சிகிச்சை
வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் சென்றல் வைத்தியசாலையில் மட்டுமே முறிவு தெறிவு மற்றும் மூட்டு நோய்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அத்துடன் வார மொரு தடவை ஆலோசனை சேவையும் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.

342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் தனித்துவத்தை பேணியவாறு இணைந்து செயற்பட தயாராகவுள்ளோம்

## வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவிப்பு

**(மட்டக்களப்பு)**

**முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் பேணிப் பாதுகாத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செல்லும் அதேவேளை தென்னிலங்கையிலுள்ள பௌத்த சமூகத்துடனும் உடன்பட்டுச் செல்ல ஆயத்தமாக உள்ளோம் என வடமாகாண சபை உறுப்பினர் அஸ்ஸெய்க் அஸ்மின் ஐய்யூப் தெரிவித்துள்ளார்.**

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் காத்தான்குடியில் வெள்ளிக்கிழமை இரவு நடாத்திய பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை காட்சிப் பொருளாக வைத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியலை நடத்தியது. இதன் மூலம் 1994 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலுமாக இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டது.

அதே போன்று வடக்கு முஸ்லிம்களைக் காட்டி வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட நிதிக்கு இதுவரை என்ன நடந்தது? என்பது தெரியாமலுள்ளது. ஆனால், வட மாகாண முஸ்லிம்களின் நிலையில் இன்னமும் மாற்றம் எதுவும் எற்படவில்லை.

புத்தளத்திற்கு சென்று பார்த்தால் தெரியும் வடமாகாண முஸ்லிம் அகதிகளின் நிலை.

வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினை என்பது இந்த நாட்டிலுள்ள தேசிய முஸ்லிம் உம்மத்தின் பிரச்சினையாகும். இது சர்வதேச முஸ்லிம் உம்மத்தின் பிரச்சினையாகும்.

எங்களுக்குள்ளேயே இருந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்ட பிரதிநிதியும் வடமாகாண முஸ்லிம்களின் நலனுக்காக உழைப்பார் என எதிர்பார்த்தோம். ஆனால் அதுவும் நடக்கவில்லை.

வட மாகாண முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள் என சரியாக கூறுகின்ற எந்த ஆவணமும் செய்யப்படாத நிலையில் கடந்த செப்டெம்பர் 9 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தலைமையிலான முஸ்லிம் கூட்டமைப்பும் இணைந்து செய்து கொண்ட உடன் படிக்கையின் மூலம் வட மாகாண முஸ்லிம்கள் பலவந்தமாகத்தான் வெளியேற்றப்பட்டார்கள் என சரியாக பேசுகின்ற வரலாற்று ரீதியான ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்தில் கவனம் செலுத்துவதும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் எமது எதிர்காலத்து வேலைத்திட்டங்களாகும்

வடக்கிலிருந்த முஸ்லிம்களை நூறு வீதம் மீளக் குடியேற்ற முடியாவிடினும். வடக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்த இடங்களை அவர்களின் பாரம்பரிய பூமியென அடையாளப்படுத்துவதுடன் மீள்குடியேறலாம் என்ற சூழலை உருவாக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் பேணிப்பாதுகாத்துக் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செல்லும் அதே வேளை தென்னிலங்கையிலுள்ள பௌத்த சமூகத்துடனும் உடன்பட்டுச் செல்ல ஆயத்தமாக உள்ளோம் என அவர் இதில் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சூறா சபை உறுப்பினரும் முன்னாள் காத்தான்குடி நகர சபை எதிர்க்கட்சி தலைவருமான பொறியியலாளர் எம்.எம்.அப்துர் றஹ்மான், அமீர் அஸ்ஸெய்க் எம்.பி.எம்.பிர்தௌஸ் நழீமி, ஊடக பேச்சாளர் அஸ்ஸெய்க் எம்.நஜா இஸ்லாஹி ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)

# கசினோ சூதாட்டத்தை எதிர்த்து நிற்போம்

## ஐ.தே.க. தெரிவிப்பு

கசினோ குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக வாக்களிக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

கசினோ சூதாட்ட மையம் அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கசினோ மற்றும் ஏனைய சூதாட்ட மையங்கள் தொடர்பில் இரண்டு உத்தேச சட்டங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எனினும், இந்த உத்தேச சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கப்படும் என எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. இந்த சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் மற்றும் எதிராக வாக்களித்தவர்கள் பற்றிய தகவல்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சூதாட்ட மையத்தை அமைப்பதன் மூலம் பாரியளவில் உள்நாட்டுப் பிரஜைகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்க முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், அரசாங்கததின் இந்த முயற்சிக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட சில கட்சிகள் எதிர்வரும் 23ஆம் திகதி பாரியளவில் எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தவுள்ளன. கசினோ சூதாட்ட மையங்கள் உருவாக்கப்படுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்து போராட்டம் நடத்தப்படவுள்ளதாகத் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. (அ-2)

# சொத்து விபரங்களை 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குக

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மா காண சபைத்தேர்தல்களில் தோல்வியடைந்த வேட்பாளர்கள் தங்களுடைய சொத்து விபரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்காவிடின், அவ்வாறானவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மூன்று மாகாண சபைக்கான தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களில் சிலர் தங்களுடைய சொத்துவிபரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாகாண சபைகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதற்கு முன்னரும் தேர்தலில் தோல்வியடைந்த உறுப்பினர் தேர்தல் நிறைவடைந்த மூன்று மாதங்களுக்கு முன்னரும் தங்களுடைய சொத்து விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)








அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் நேற்று திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலம்புரி பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம்,இ.ச.பே. நாகரத்தினம் ஆகியோருக்கு சைவப்புரவலர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் சைவப்புரவலர்கள், சைவப்புலவர்கள், இளஞ் சைவப்புலவர்களாக பட்டம் பெற்றவர்களையும் ***சைவநாதம்*** மலர் வெளியிடப்பட்டதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒரு பெண்ணைப் பார்த்தேன் அவளும் என்னைப் பார்க்கின்றாள் காதலாக இருக்குமோ?

**மதியழகன், உடுவில்**

Mr. வியா!

ஒரு பெண்ணைப் பார்த்தேன் அவளும் என்னைப் பார்க்கின்றாள் காதலாக இருக்குமோ?

**நாசமறுக்க.. தம்பி மதி பார்வையில் பலவகை. பாசப்பட்டுப் பார்ப்பது, பாவப்பட்டு பார்ப்பது, பரிதாபப்பட்டுப் பார்ப்பது, விசித்திரமாய்ப் பார்ப் பது, விரக்தியால் பார்ப் பது, எதேட்சியாய்ப் பார்ப்பது, எப்போதும் போல் பார்ப்பது இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். காதல் பார்வை ஒன்றையும் இன்னும் கண்டு பிடிக்கவில்லை.**

---

**தர்ஷிகா, யாழ்ப்பாணம்**

அன்பின் வியாசரே!

அன்பு, இரக்கம், கருணை இவைகளோடு உள்ள மனிதர்கள் யாரையாவது கண்டால் எனக்குச் சொல்லுங்களேன்?

**வலம்புரியில் வந்து வியாசரைச் சந்தித்து விட்டுச் செல்லுங்களேன்.**

---




**தனேஸ், ஒஸ்காலேன்.**

அன்பின் வியாசரே!

நான் ஒரு பெண்ணை காதலித்து நன்றாக ஏமார்ந்து விட்டேன். நீரும் காதலித்து இருப்பீர் உமது அனுபவம் எப்படி? உண்மையை மறைக்காமல் பதில் சொல்லும்.

**நான் காதலித்த பெண் என்னை ஏமாற்ற வேண்டும் என்று வேண்டாத தெய்வமில்லை. இருந்தும் என்ன பயன் நான் அவளைத்தான் திருமணம் செய்து கொண்டேன்.**

---

### நீங்கள் மதவிவகார அமைச்சரானால்?

**கே.எஸ்.சிவஞானராசா, கொக்குவில்**

அன்பின் வியாசரே!

நீங்கள் மதவிவகார அமைச்சரானால்?

**திருடப்படும் கோவில் சிலைகளை கொள்வனவு செய்யும் மையங்களை அமைத்து மீண்டும் அதை கோவில்களுக்கு ஒப்படைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துவேன்.**

---

**பிரான்சிஸ், ஊர்காவற்றுறை**

அன்பின் வியாசரே!

என்னை உங்களுக்கு தெரியுமா? இல்லாவிட்டால் புகைப்படம் அனுப்பட்டுமா?

**ஐயோ பிரான்சிஸ் எனக்கு திருமணமாகி நாற்பது வருடங்கள் ஆகிவிட்டது.**

---

**எஸ். விஜிதபாமா, கோண்டாவில்**

அன்பின் வியாசரே!

ஓர் ஆண் பெண்ணிடம் பேனாவைக் கொடுத்து விட்டு திரும்ப வாங்கினால் அதற்கு என்ன அர்த்தம் நட்பா? காதலா?

**கொடுத்த பொருளை திருப்பி வாங்குவதற்கு இப்படியொரு அர்த்தமா? அப்படியென்றால் கடன் வாங்கியவர்களில் பாதிப்பேருக்கு திருமணம் முடிந்திருக்குமே!**

---

### கொஞ்சம் சிரிங்கப்பா...

"காசிக்குப் போனா எதையாவது விட்டுட்டு வரணும்னு சொல்றாங்க. எனக்கும் போகணும் போலத்தான் இருக்கு..."

"போயிட்டு வர வேண்டியதுதானே?"

"என் மனைவி வரமாட்டேங்கிறாளே !"



**ரி.விஜி**

அன்பின் வியாசரே!

நாட்டில் இப்போது நட்பெனும் போர் வையில் காதலை கொச் சைப் படுத்துகிறார்கள். இதனால் நல்ல நட்பும் களங்கப்படுகிறது. இதில் நல்ல நட்புக்கும் காதலுக்கும் என்ன வித்தியாசம் நீங்கள் கூறுங்கள்?

**உள்ளதைக் கொடுத்தால் அது நட்பு. உள்ளத்தைக் கொடுத்தால் அது காதல்.**

---

**சு.ஜெயரூபன், பருத்தித்துறை**

அன்பின் வியாசரே!

நம் நாட்டின் விலைவாசி உயர்வு எந்த நிலையில் போய் முடியும்?

**விவசாயம் செய்வது மதிப்பின்றிய தொழில் எனும் எண்ணம் அழிந்து போகும்வரை விலைவாசி இறங்காது! எல்லோருமே டாக்டர், எஞ்சினியர் ஆகினால் நோயாளிகளும் கட்டடங்களும்தான் உயரும். உயர்ந்து நிற்கும் விலைவாசி இறங்காது.**

---

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி
வைக்கவும்

# கசினோ சூதாட்ட பிரேரணைக்கு எதிராகவே வாக்களிப்போம்

## ஹெலஉறுமய தெரிவிப்பு

கசினோ சூதாட்டத்தை சட்டமாக்கும் பிரேரணைக்கு எதிராக பாராளுமன்றத்தில் வாக்களிக்கப் போவதாக அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெலஉறுமயவின உதவிப் பொதுச் செயலாளரும் மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்பன்பில தெரிவித்தார்.

அத்தோடு இப்பிரேரண்ணயை எதிர்த்து வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்து அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகஜரொன்றைக் கையளிக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கசினோ சூதாட்டத்தை சட்டமாக்கும் பிரேரணை எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதன்போது ஜாதிக. ஹெல உறுமய இப்பிரேரணையை எதிர்த்து விவாதத்தில் கருத்துகளை வெளியிடும். அது மட்டுமல்லாது வாக்கெடுப்பின்போதும் எதிர்த்து வாக்களிக்கும்.

இப்பிரேரணையை எதிர்த்து பௌத்த குருமார் மற்றும் புத்திஜீவிகளின் கருத்துகளை பெற்றுக்கொண்டு அதனடிப்படையில் அவர்கள் அனைவரினதும் கையெழுத்துகளைப் பெற்றுக கொண்டு இப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்து மகஜரொன்றைத் தயாரித்து அம் மகஜரை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளோம். அதுமட்டுமல்லாது மகாநாயக்க தேரர்களை சந்தித்து இப் பிரச்சினை தொடர்பில் தெளிவு படுத்தவுள்ளோம். உல்லாச பிரயாணத் துறையை ஊக்குவிப்பதாக கூறிக்கொண்டு கசினோ சூதாட்டத்திற்கு வரி விலக்கு வழ ங்குவதை எதிர்க்கின்றோம்.

கசினோ சூதாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சூழ்நிலையில், அதற்கு வரிவிலக்கு வழங்குவதும் அதனை சட்டமாக்குவதும் பிழையான செயலாகும். இது நிறைவேற்றப்பட்டால் போதைவஸ்து, மது பாவனைகள் நாட்டில் அதிகரிக்கும்.

விபச்சாரம் தலைதூக்கும்; எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் சீரழியும; ஆயுத கலாசாரம் தலைதூக்கும். எனவே, இவ்வாறு நாட்டைச் சீரழிக்கும் இப்பிரேரணையை ஆதரிக்க முடியாது என்று உதய கம்பன்பில தெரிவித்தார். (அ-2)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

வானுடன் சிறியரக லொறி ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 34 பேர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் புத்தளம் - கற்பிட்டி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

விபத்தில் வானில் பயணித்த 16 பேரும் லொறியில் பயணித்த 18 பேரும் காயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது வானில் பயணித்த பெண் ஒருவரும் லொறியில் பயணித்த ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

வப்த்தில் காயமடைந்த சிறியரக லொறியின் சாரதி கைது செய்யப்பட்டு, புத்தளம் பொலிஸாரின் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# விசேட அதிரடிப்படையினருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படும்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை ஏற்பாடாக இவ்வாறு விசேட அதிரடிப்படையினருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு தீவிரவாத அமைப்புக்கள் உள்ளூர்குழுக்களுடன் இணைந்து செயற்படக கூடிய சாத்தியம காணப்படுவதாக சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி தெரிவித்துள்ளார்.

களுத்துறை விசேட அதிரடிப்படை பயிற்சி முகாமில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 ஆண்டுகள் நிலவிய உள் நாட்டு பயங்கரவாதத்தை விடவும், வெளி நாட்டு பயங்கரவாதிகளுடன் கூட்டாக இணைந்து மேற்கொள்ளப்படக் கூடிய நாச வேலைகள் ஆபத்தானவை.

சரியான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்த விசேட அதிரடிப்படையினருக்கு பயிற்சி அளிக்க வேண்டுமெனவும் ஒவ்வொரு துப்பாக்கி தோட்டாவும் எதிரியை இலக்கு வைக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க அனுமதிக்க முடியாது பயங்கரவாதம் தற்பொழுது இல்லாதொழிக்கப்பட்ட போதிலும் அச்சுறுத்தல்கள் முழுமையாக நீங்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பேராசிரியர்கள் மீண்டும் போராட வேண்டி வரும்

## பேராசிரியர் ஒன்றியம் எச்சரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்கள் மீண்டும் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளனர். இனங்காணப்பட்டதன் அடிப்படையில் சம்பள முரண்பாடுகளுக்கு அரசாங்கம் இது வரையில் தீர்வு வழங்கவில்லை என பல்கலைக்கழக பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே மீளவும் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்க போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கைகளில் ஒரு சிலவற்றை மட்டுமே அரசாங்கம் இதுவரையில் நிறைவேற்றியுள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அரசாங்கம் முன்னதாகவே எழுத்து மூல வாக்குறுதி அளித்துள்ளதாக தெரிவித்த அவர்,

2012 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் 99 நாட்கள் தொடர் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பளத்தை 25 வீதத்தினால் உயர்த்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காய்ச்சல்

ஏர் பிடிக்க வேண்டிய
கைகள் எல்லாம்
பீர் பிடித்துத் திரிய
வேர் ஓடிய பூமியெல்லாம்
கார் ஓடும் கார்ப்பெட் ஆக
நீர் ஓடிய நிலமெல்லாம்
நீறு பூத்த நெருப்பாக
சனியன் வெயில் என்று
அம்மாக்கள் திட்டுவதும்
கலிகாலம் எனும் பெருசுகளும்
குளோபல் வார்மிங் என சிறுசுகளும்
சொல்வதும் வாடிக்கையாக
எனக்கு காய்ச்சல் என்றால்
கவனிக்க நாலுபேர்
நாளுக்கு நாள் எகிறும்
பூமியின் காய்ச்சலை
கவனிக்க யாருமில்லை
நேரமும் இல்லை...

சோ.நிக்கஞ், அரியாலை

# நிழலாய் நீயம்மா

எல்லையில்லா வானமே
எனைச் சுமந்த தாயவளே
பாரினிலே நான் தவழ
நீ பட்டதுயர் நானறிவேன்
நல்வழிகாட்ட அன்புவழி நடக்க
ஆவன செய்ய
நீ பட்டபாடு நானறிவேன்
பண்புடன் நான் வாழ
நீ பட்ட இன்னல்களை நானறிவேன்
வளமான வாழ்வுக்கு இன்னல் பல கண்டு
அழகான வாழ்வு தந்த தாயவளே
ஏழ்மையில் துடித்தாலும்
பொன்பொருளில் நான் புரண்டாலும்
எத்தனை ஜென்மம் நான் எடுத்தாலும்
உன் நினைவைச் சுமந்து
நிழலாய் தொடர்வேன் தாயவளே

சி.கலாமணி, மண்டைதீவு

# ஒரு மரம் பற்றிய...

அந்த மரத்தின் பச்சை இலைகள்
உதிர்ந்திருக்கின்றன
பார்ப்பதற்கு பட்டதுபோல்
காட்சியளிக்கிறது
அந்த மரத்தினைப் பார்ப்பதற்கு
வேறு தேசத்தில் இருந்தெல்லாம்
யார் யாரோ... எல்லாம்
வந்து போகிறார்கள்
உயிர்ப்பை இழந்து விட்டதாக
கதைத்துக் கொள்கிறார்கள்
மரத்தின் கதை முடிந்துவிட்டதாகவும்
சொல்லிக் கொள்கிறார்கள்
காலச் சுழற்சி நீண்டு செல்கிறது
ஒருவேளை அந்த மரம்
தனது துளிர்ப்புக்கான
காலநிலையை
எதிர்பார்த்திருக்கக்கூடும்

கவிஞர் ஆ.முல்லைதிவ்யன்



# காதல்

மதுவால் மதி மயங்கி
மொட்டவிழ்ந்த மலரை
மொய்க்கும் வண்டின்
மோகம் தீர்ந்திடாதோ:
மது தீர்ந்தால்....
அழகு வண்ணம் கலையும்
அணையும் காதல் போல...
நட்பு
இரு கருவறையில் பிறந்து
கல்லறை இரண்டு சென்றாலும்
ஓர் நெஞ்சறையில் ஒன்றித்திருக்கும்
ஓரிதழ் பூ

இரா.ஜெயறூ


# தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
தன்னைத் தந்த தந்தை
படும்பாடு அறியாமல்
தன்னுடன் சேர்ந்த கும்பலோடு
தடிகள் பொல்லுகள்
தரங்கெட்ட வார்த்தையுமாய்
தந்தையைக் கடந்து செல்கின்றான்
அவனும் ஒருநாள்
தந்தையாவன் என்பது அறியாமல்

மாவை.நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல் - 174



## மறுக்கப்பட்ட கல்வி

வறுமையால் தானே
பெருமை இழந்து
மறுக்கமுடியாத துயரை
இறுக்கமாகப் பற்றி
உறுதுணையான கல்வியை
அறுத்தெறிந்ததால்
வெறுமையுடன் நீ
நிறுத்திய கல்வி தொடர
உறுதிபூண் உதவி கிட்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## எதிர்நீச்சலடி

அறிவுப் பசியைத் தீர்க்க
வந்த நூலை
பூட்டியுள்ளது என்று
சோர்ந்துள்ளாய் மானிடா
எதிர்நீச்சலடி என்ன
ஆகினாலும் பரவாயில்லை
நாளை உனக்காக திறந்த நூலுடன்
விடியும் நாளை

கே.துவாரகன்
புத்தூர்

## துணிந்திடு

உன் மௌனம் உனக்கொரு
வழியை காட்டாது மகனே
உன் மௌனத்துக்கான காரணத்தை
துணிவுடன் யாரிடமாவது
வெளிப்படுத்து
நிச்சயம் அதிலிருந்து விடுபட்டு
நலம் பெறுவாய்

நாபி விமலதாஸ்
நவாலி

## கல்வி

உன் படிப்புக்குரிய
புத்தகத்துக்கு பூட்டா?
கவலைப்படாதே
மாணவனே
கல்வி என்பது பரந்து
விரிந்த கடல்- அதற்கு
எல்லையே கிடையாது!

சி.ஜெயருக்ஷன்
சாவகச்சேரி

## ஏக்கம்

உலகில் கல்விக்கு
பணமென்ற பூட்டு
போடப்பட்டதால்
ஏழை மாணவர்கள்
தினம் கல்விக்காக
ஏங்குகிறார்கள்

க.ஜெயரூபன்
பருத்தித்துறை

## உடன் பிறப்பு

நிர்க்கதியா...
நிர்ப்பந்தமா...
உலகை உன் கைக்குள்
அடக்கியும்
ஏன் இன்னும்
தலைகுனிவு
எழுந்து புறப்பட்டு
உடைத்தெறி
உள்ளிருப்பவைகளை
வெளிக்கொணர
என் உடன் பிறப்பே

யோ.கீர்த்திகா
மிருசுவில்

## திறவுகோல்

சிறுவனே! புழுதி படிந்த
புத்தகத்தின் பூட்டை நீ திறந்திடு
ஒரு புதுயுகம் படைத்திடு
உன் புகழை நீ பரப்பிடு

## கறிக்குதவாத

ஏட்டுச் சுரக்காய்
கறிக்குதவாதது மாதிரி
ஆசான் புகட்டாதறிவை
அனுபவம் புகட்டுமென்பதையும்
முழுவதும் நம்பியதால்
புத்தகத்தை மூடிவிட்டு
நித்திரை கொள்கின்றார்
வித்தகத்தை விரைந்து பெற
விழிப்புணர்வைத் தூண்டும்
வழிகாட்டி இவருக்குத் தேவை

க.நாகராசா
சாவகச்சேரி

## மீட்சி

மாணவச் சிட்டுக்களின்
புத்தகங்களுக்கு பூட்டு போட்டு
போதைக்குள் தள்ளும்
பேய்களைக் கண்டு கொள்வோம்
அவரை மீட்போம் உயர்வாய்

நாதன்
மானிப்பாய்

## இலட்சியம்

தூங்கும் சிறுவனே!
கற்றது போதும்
என்றா தூங்குகிறாய்
கற்ற கல்வியை ஏனையோருக்கு
புகட்டுவதே உனது பணி
எழுந்து வா உனது பயணம்
ஒரு இலட்சியத்தை
நோக்கிச் செல்லட்டும்

ரி.விஜிதா
மயிலிட்டி

## தொடர்

மாணவனே! தாமதமேன்
பூட்டுக்கள்
புத்தகங்களுக்கு மட்டுமே
உன் புத்திக்கல்ல
புறப்படு...
புதிது புதிதாய்
கொட்டிக் கிடக்கிறதே

தாட்சாயினி
கரிமலை

## கல்விக்குத் தடையா?

புத்தகப் பெட்டிக்குப்
பூட்டுப்போட்டுக் கல்வியைத்
தடை செய்து விடலாமா?
சூரியனைக் கை கொண்டு
மறைக்க எண்ணும் முட்டாளல்ல நீ
துணிவோடு தடைப்பூட்டைத்
தகர்த்துக் கல்விச் செல்வத்தை
அள்ளி எடுத்துப் பட்டத்தை வாங்கு


துரை
தென்மட்டுவில்

## நியதி

படிக்கத் தெரியாத வயதில்
படிக்கச் சொல்லி
இம்சைப்படுத்துகிறார்
பெரியவர்
ஆமை நகரும் வேகம்போல்
பதுங்கி அழுவது
நியதியாகிறது

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -175



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 24.10.2013 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசினோ உள்ளிட்ட சூதாட்ட வலயங்களை கட்டுக்குள் வைத்திருப்பதே எமது திட்டம்

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

**நாட்டின் பல இடங்களிலும் செயற்பட்டு வரும் கசினோ உள்ளிட்ட சூதாட்ட நிலையங்களை கொழும்பில் குறிப்பிட்டதொரு வலயத்திற்குள் கொண்டு வந்து கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவே திட்டமிட்டு வருவதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

வெவ்வேறு இடங்களில் செயற்படுபவையும் மூடப்பட்ட பின்னர் குறித்த ஒரு வலயத்திற்குள் அவை இடமாற்றம் செய்யப்படுமே தவிர எதிர்க்கட்சிகளும் பொதுபல சேனா உள்ளிட்ட ஏனைய அமைப்புகளும் விமர்சிப்பதைப் போன்று நாட்டிற்குள் புதிது புதிதாக கசினோ உள்ளிட்ட சூதாட்ட நிலையங்கள் உருவாக்கப்படமாட்டாதெனவும் அவர் கூறினார்.

அந்த வகையில் கொழும்பு கோட்டை மற்றும் கொம்பனி வீதியிலுள்ள டி.ஆர். விஜயவர்தன மாவத்தை மற்றும் ஜஸ்ரிஸ் அக்பார் மாவத்தையில் விசேட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்படவுள்ள வலயத்திற்குள் ஏற்கனவே இயங்கி வரும் கசினோ மற்றும் சூதாட்ட நிலையங்கள் இடமாற்றம் செய்யப்படும்.

இலங்கையில் கசினோ சூதாட்ட நிலையங்களை நடத்துவதற்கு நான்கு தனி நபர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நால்வர் மாத்திரமே தொடர்ந்து கசினோ நிலையங்களை நடத்துவார்களே தவிர எக்காரணம் கொண்டும் புதிதாக எவருக்கும் கசினோ மற்றும் சூதாட்ட நிலையங்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுடனும் கொழும்பில் மேற்படி வலயம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அவுஸ்திரேலிய முதலீட்டாளரான ஜேம்ஸ் பெக்கரின் 350 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆரம்பிக்கப்படவுள்ள 'க்ரவுன்' அபிவிருத்தி திட்டம் மற்றும் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் 850 மில்லியன் அமெரிக்க டொலர்களிலான திட்டம் ஆகியன இணைந்தே இந்த வலயம் உருவாக்கப்படுகிறது.

இந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் இதுவரை கசினோ மற்றும் சூதாட்ட நிலையங்களை இயக்கி வரும் 4 உரிமையாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதன் மூலமே தமது அபிவிருத்தி திட்டத்திற்குள் இடமாற்றம் செய்யப்படவுள்ள கசினோ மற்றும் சூதாட்ட நிலையங்களை உள்வாங்கவுள்ளனர்.

குறித்த வலயத்திற்குள் கசினோ சூதாட்ட நிலையங்களைத் தவிர இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய பல அபிவிருத்தி திட்டங்களும் உள்ளடக்கப்படும்.

நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் சிதறிக் கிடக்கும் மேற்படி சூதாட்ட நிலையங்களை ஒரு வலயத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநாட்டுவது இலகுவாக அமையுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான சட்டமூலம் ஏற்கனவே பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அதேநேரம், அபிவிருத்தி திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாக அதனை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் இது குறித்த விரிவான தகவல்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

நாட்டின் கலாசாரம் சீரழிவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோமெனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

## கசினோ சூதாட்ட அனுமதிக்கு எதிராக கொம்பனித் தெருவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு சிலேவ் ஹைலேண்டை கசினோ ஹைலேண்டாக மாற்ற வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்தி நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு, கொம்பனித்தெரு சந்தியில் இருந்து மத அமைப்புகள், பொது மக்கள், சிவில் அமைப்புகள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பௌத்த கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உண்மையான நோக்கம் இருக்குமானால் இப் போராட்டத்தில் பொது பலசேனா கலந்து கொள்ள வேண்டுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், கொம்பனித்தெருவில் வாழும் மக்களின் வீடுகளை உடைத்து வெளியேற்றி அங்கு கசினோ சூதாட்ட நிலையங்களை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் பௌத்த விகாரைகள் முக்கியமாக கங்காராம விகாரை உட்பட இந்துக் கோயில்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் உள்ளன. பாடசாலைகளும் இயங்குகின்றன.

இவ்வாறான பிரதேசத்தில் கசினோ சூதாட்ட நிலையங்களை அமைப்பது சமூக சீரழிவுக்கு வழிவகுக்கும் என்றார். (அ-2)

## ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலை ஆசிரியர் தின விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/வல்வை அமெரிக்கன் மிஷன் த.க பாடசாலை அதிபர் க.சுப்பிரமணியம் கலந்து கொள்வார். (அ)



**தேசிய டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை பிரகடனப்படுத்தும் பொருட்டு யாழ்ப்பாண சமுர்த்தி மகாசங்க பிரிவால் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு பிரதி இல்லங்கள் தோறும் சென்று அண்மையில் விநியோகிக்கப்பட்டது. மூகாமைப் பணிப்பாளரால் குறித்த நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் குடும்ப தலைவர்களுக்கு வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.**

## இந்தியா பங்கேற்பது சந்தேகத்துக்குரியது



### சுஜாதா சிங்

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பாரா என்பது தொடர்பில் இந்தியா சந்தேகத்தை தோற்றுவிக்கும் பதிலை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை செயலாளர் சுஜாதா சிங், செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில்,

கொழும்பு மாநாட்டில் பங்கேற்குமாறு இலங்கை, இந்திய பிரதமருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

எனினும் இந்திய அரசாங்கம் இன்னும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பிலான முடிவு பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறவிருக்கின்ற நாட்களை அண்மித்த வகையில் மேற்கொள்ளப்படும்.

இதன்போது வெளியுறவுக் கொள்கை. சர்வதேச மற்றும் உள்நாட்டு கரிசனைகள் கவனத்தில் எடுக்கப்படும் என்று சுஜாதா குறிப்பிட்டார். (அ-2)

## புகைத்தலால் தினமும் 60 பேர் வரை உயிரிழக்கின்றனர்

### சுகாதார அமைச்சர் மைத்திரிபால

புகைத்தலுடன் தொடர்புபட்ட சுகாதார பிரச்சினைகளால் தினமும் ஏறக்குறைய 60 பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொற்றா நோய்கள் பலவற்றின் முக்கிய காரணியாக விளங்குவது புகைபிடித்தல் செயற்பாடாகும். புகைபிடித்தலுடன் சம்பந்தப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளால் தினமும் ஏறக்குறைய 60 பேர்வரை மரணிப்பதுடன் வருடமொன்றுக்கு 20 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர்.

புகைத்தலால் ஏற்படும் பாதிப்புகளின் தன்மைகளை மாணவர்கள் நேரடியாக காண்பதற்கு மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையை பார்வையிட நிர்வாகத்தினர் அனுமதியளிக்க வேண்டும்.

மேலும், கொழும்புக்கு சுற்றுலாவை மேற்கொள்ளும் சிரேஷ்ட தர வகுப்பு மாணவர்களை அங் கொடை தேசிய உளச் சுகாதார நிறுவனத் திற்கும் மஹரகம புற்றுநோய் வைத்திய சாலைக்கும் அழைத்துச் செல்ல வேண்டும்.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் புற்று நோயாளர்களில் அதிகமானோர் 35 வயதுக்கும் 45 வயதுக்குமிடைப்பட்டவர்கள். இவர்களில் அதிகமானோர் தீவிர புகைபிடித்தல் பழக்கமுடையவர்களாக காணப்படுகின்றனர்.

வாய் மற்றும் நுரையீரல் புற்று நோய்ச் சிகிச்சைக்காக அரசாங்கம் வருடமொன்றுக்கு 15 மில்லியன் ரூபாவை செலவு செய்கிறது.

புகைத்தலால் பாதிக்கப்படுவோரை மருந்துகளால் பாதுகாக்க முடியாது. ஒரு புற்று நோயாளருக்கு ஊசி ஏற்றுவதற்காக 3 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது. இருந்தும் புற்று நோயாளர்களை மருந்து களால் காப்பாற்ற முடியாதுள்ளது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒற்றுமையின் சக்தி



அது ஒரு சிறிய கிராமம் அந்த கிராமத்தில் சில வீடுகளும் இருந்தன. அந்த கிராமத்திற்கு மத்தியில் ஒரு பெரிய கோயிலும் இருந்தது. அந்தக் கோயில் கோபுரத்தில் ஏராளமான புறாக்கள் வசித்து வந்தன.

அந்தக் கோயிலுக்கு வெளியே ஒரு பெரிய அரச மரம் இருந்தது. அந்த அரச மரத்தில் சில காகங்கள் கூடு கட்டி வசித்து வந்தன.

அன்று காலை கோயிலை ஒட்டியிருந்த ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண்மணி காகத்தைக் கூவி அழைத்து பழைய சாதத்தை தெருவில் கொட்டினாள். இதை கவ்னித்த ஒரு காகம் உடனே குரல் கொடுத்தது.

காகத்தின் குரலைக் கேட்ட தும் நான்கு திசைகளிலிருந்தும் காகங்கள் அங்கே வந்தன.

எல்லா காகங்களும் ஒன் றாக சேர்ந்து கிடைத்த உண வைப் பங்கு போட்டுச் சாப் பிட்டன.

இதை அந்தப் பகுதியில் இருந்த ஒரு புறா கவனித்துக்கொண்டிருந்தது.

உணவை சாப்பிட்டு மரத்தில் அமர்ந்திருந்த காகத்திடம் அந்தப் புறா சென்றது.

ஆமா, எல்லோரும் எப்பவுமே ஏன் ஒண்ணாவே சாப்பிடுறீங்க. யாருக்கு கிடைக்குதோ அவங்க மட்டும் சாப்பிட்டுட்டு மீதியிருந்தா பத்திரப்படுத்தி வெச்சிருந்து அப்புறமா சாப்பிடலாமில்லியா?

கிடைக்கிற உணவை பங்குபோட்டு சாப்பிடறதுதான் எப்பவும் நல்லது.

அப்பத்தான் நமக்குள்ளே அன்பும் ஒற்றுமையும் வளரும்.

ஆனால், காகம் சொன்ன இந்தக் கருத்தை அந்தப் புறா ஏற்றுக் கொள்ளவில்லை.

சரி, கொஞ்சமா கிடைச்சா என்ன பண்ணுவீங்க?


எவ்வளவு கொஞ்சமா கிடைச்சாலும்சரி, கிடைச்சதை நாங்கள் எல்லோரும் சம்மாக பங்கு போட்டு சாப்பிடுவோம். நிறைய கிடைச்சாலும் அதையும் சமமாக பங்குபோட்டு சாப்பிடுவோம் என்றது காகம்.

காகத்தின் சொல்லை அலட்சியப் படுத்திச் சென்றது புறா.

சில நாட்கள் சென்றன.

அந்த கிராமத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊரிலிருந்து சில வேடர்கள் வந்தார்கள்.

உண்டிவில்லால் அவர்கள் கோயில் மதில்சுவரின் பொந்துக்குள் இருந்த புறாக்களை நோக்கி கற்களால் அடிக்க ஆரம்பித்தார்கள்.



அனுபவம் வாய்ந்த வேடர்களின் குறி தப்பவில்லை. உண்டிவில்லிலிருந்து புறப்பட்ட கற்கள் புறாக்களைத் தாக்கின.

அதில் இரண்டு புறாக்கள் அடிபட்டு கீழே விழுந்தன.

அவர்கள் உண்டிவில் மூலம் எறிந்த கல் ஒரு காகத்தின்மீது பட்டு அதுவும் கீழே விழுந்தது.



இதைக் கவனித்த மற்றொரு காகம் உடனே குரல் கொடுத்தது. அதன் குரலைக் கேட்டு அந்த பகுதியிலிருந்த அனைத்து காகங்களும் அங்கே உடனே வந்தன.

அடிபட்டு கீழே கிடந்த காகத்தைப் பார்த்து அவை கோபமடைந்தன. அவை ஆக்ரோசமாக அந்த வேடர்களை சூழ்ந்து கொண்டு அவர்களைக் கொத்த ஆரம்பித்தன.

காகங்களின் தாக்குதலை சமாளிக்க முடியாத அந்த வேடர்கள் வலியால் கத்திக்கொண்டே அந்த இடத்தில் இருந்து ஓடிப்போனார்கள்.

காகங்களின் இந்த செயலால் புறாக்கள் தப்பித்தன. அடிபட்டுக் கீழே விழுந்த புறாக்களை மற்ற புறாக்கள் காப்பாற்றின.

இப்போது கூட்டத்திலிருந்த அந்தப் புறா காகத்திடம் மிகவும் பணிவான குரலில் பேசியது. ஒற்றுமை எவ்வளவு சக்தி வாய்ந்ததுன்னு இன்னைக்கு நான் உங்க மூலமா புரிஞ்சுக்கிட்டேன். அன்னைக்கு நீ சொன்னது சரிதான். இனி நான்கூட மற்ற புறாக்கள்கிட்டே ஒற்றுமையைப் பத்தி எடுத்துச் சொல்றேன். இதைக் கேட்ட காகம் மகிழ்ச்சி அடைந்தது. ☆☆☆☆☆☆☆☆☆




- 1903- ஐக்கிய அமெரிக்க லூசியானாவை பிரான்சிடம் இருந்து கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- 1827-ஒட்டோமான், எகிப்தியப் படைகள் பிரித்தானிய, பிரெஞ்சு, ரஷ்யக் கூட்டுப் படைகள் நவாரினோ என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தன. இது கிரேக்க விடுதலைப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.
- 1941- கிறகுஜேவாச் படுகொலைகள்: சேர்பியாவின் கிறகுஜோவாச் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் நாசி ஜேர்மனியர்களினால் கொல்லப்பட்டனர்.
- 1944-இரண்டாம் உலகப்போர்: சோவியத் இராணுவம் யுகோசுலாவியத் தலைநகர் பெல்கிரேட்டை ஜேர்மனியிடமிருந்து மீட்டது.
- 1955-தலோட் ஒவ்த ரிங்ஸ் நூலின் கடைசிப் பாகமான ரிட்டர்ன் ஒஃவ் த கிங் வெளியிடப்பட்டது.
- 1973- சிட்னி ஒப்பேரா மாளிகை திறந்து வைக்கப்பட்டது.
- 1982- இலங்கையில் முதன் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. 2004-முதலாவது உபுண்டு லினக்ஸ் வெளியிடப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1469-குரு நானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் (இ.1539)
- 1884-டி.எஸ்.சேனநாயக்கா, இலங்கையின் முதலாவது பிரதமர்(இ.1952)
- 1923- தொ.மு.சி. ரகுநாதன், எழுத்தாளர், திறனாய்வாளர் (இ.2001)
- 1946- எல்ஃப்ரீத் ஜெலினெக், ஆஸ்திரிய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர்
- 1954-ந.செல்வராஜா, இலங்கையைச் சேர்ந்த நூலகவியலாளர், ஆய்வாளர்

### இறப்புக்கள்

- 1984-கார்ல் கோரி, ஆஸ்திரிய மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1896)
- 1984-போல் டிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய இயற்பியலாளர் (பி.1902)

### டி.எஸ். சேனநாயக்க



டி.எஸ். சேனாநாயக்க 1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி பிறந்தார். இவர் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரும், இலங்கையின் தேசத் தந்தையும் ஆவார்.

1929ல் இலங்கைச் சட்டவாக்க கழகத்தில் ஓர் உறுப்பினரானார். 1931 இல் மாநில அவைக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் வேளாண்மை, காணி அமைச்சரானார். வேளாண்மை மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார். 1946 இல் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பட்டத்தை மறுத்தார் எனினும் பிரித்தானியருடன் நல்லுறவை விரும்பினார். 1947 இல் நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இலங்கையில் முதலாவது பிரதமரானார். 1948 பெப்ரவரி 4 இல் பிரித்தானியக ஆதிக்கம் முடிவுற்றதும் முழு இலங்கையையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்ற அவர், 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி




ஆன்மீகம் 12

...மனிதனின் புறவாழ்வுக்காக சில திறமைகள், தகுதிகள் தேவைப் படுகின்றன. அந்தத் திறமைகளோ டும் தகுதிகளோடும் மனிதன் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு விட் டால் அதைத் தாண்டி வளர இய லாது.

புறச்சூழலின் வெற்றிக்காக பெற் றிருக்கும் தகுதிகளே தடைகளாக மாறி மனிதனை அடிமைப்படுத்த வாய்ப்புண்டு.

மாறாக, விழிப்புணர்வு நிலையில் எதனோடும் தன்னை அடையாளப் படுத்திக்கொள்ளாத தன்மையில் இருக்கும் போது மனிதன் விரைவாக வளரமுடியும். அந்த விழிப்புணர்வை தியானம் தருகிறது.

மனிதன் தேடிப் பெறுகிற தகவல் அறிவு அவனது உலக வாழ்க்கைக்குத் துணை புரிகிறது. ஆனால், தகவல் திரட்டு மட்டுமே இருந்தால் அந்தத் தகவல் திரட்டு உரிய முறையில் அறி வாக வெளிப்படுத்த முடியும்.



தன் இயல்பான தன்மையை உணர் ந்த ஒருவன், வாழ்வில் அன்பாக, அமைதி யாக, ஆனந்தமாக இருக்க முடியும். தன்னுடைய சக்தியைத் தெரிந்துகொள் ளாத போதுதான் பதட்டம் வளரும், பயம் வரும், சுயநலம் கூடும்.

மனிதனின் உடல், மனம், அறிவு ஆன்மீகத் தேடல் அனைத்தையும் ஒரே புள்ளியில் சந்திக்க வைத்து, உள்நிலை வளர்ச்சிக்கு உறுதுணை புரிய ஈஷா யோக மையம் ஏற்படுத்தியிருக்கும் வழியே சஹஜ ஸ்திதி யோகா.

சஹஜ ஸ்திதி யோகா என்றால் இயல் பாக வாழும் கலை என்று பொருள்.

தன் இயல்பு வாழ்க்கையில் இருந்த படியே தன்னை மேம்படுத்திக்கொள்ள அனைவருக்கும் வழங்கப்படும் அரிய வாய்ப்பு இது.

சஹஜ ஸ்திதி யோகா எந்தவொரு பழக்கத்தையும் விடச்சொல்லி வற்பு றுத்துவதில்லை. எந்தவொரு மனநிலை யையும் மாற்றச்சொல்லி வற்புறுத்து வதில்லை. அனுபவ ரீதியாக எதையும் உணர்ந்து, வேண்டாதவற்றை விலக் கிக்கொள்வதற்கான விழிப்புணர்வைத் தருகிறது.

இதுவரை உணராத பரிமாணத்தில் வாழ்க்கையை மனிதன் உணரத் தொடங்குகிறான். அன்பு, அமைதி, ஆனந் தம் ஆகியவை வெளியிலிருந்து பெரு குவதற்கல்ல. மனிதனிடம் ஏற்கனவே இருக்கும் இயல்புதான் என்பதை அனு பவ அடிப்படையில் உணரும்போது முற்றிலும் புதிய பார்வை கிடைக்கிறது.

செயல்திறன் அதிகரித்தல், உடல் நலம், மன அமைதி இவையெல்லாம் சஹஜ ஸ்திதி யோகாவில் முக்கிய அம்சங்களல்ல. அவை பக்கவிளைவு கள் தான்.

மனிதன் தன்னை உணர்ந்து, தனக் குள் இருக்கும் பேராற்றலை உணர்ந்து, உயிர்களிடையே பேதமில்லை என்கிற அனுபவத்தைப் பெறுவதே சஹஜ ஸ்திதி யோகாவின் முக்கிய நோக்கம்.

நோய் வாய்ப்பட்டிருக்கும் மனிதன் சஹஜ ஸ்திதி யோகாவிற்குப் பிறகு, நோயின் தன்மையை உணர்கிறான். ஆனால், அதனால் துன்பமடைவதில்லை.

சில அடிப்படை அணுகுமுறைகள் மாறும்போதே சில நோய்கள் அவனை விட்டு விலகுவதை இங்கே காணமுடி யும்.

கோபம், பதட்டம் போன்றவை தங் கள் பிறவிக் குணங்கள் என்று கருதி யவர்கள், வகுப்புகள் தொடங்கி சில நாட்களிலேயே அந்த குணங்கள் தங் களைவிட்டு விலகுவதைக் காண்கிறார்கள்.

சஹஜ ஸ்திதி யோகா நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் வடி வமைக்கப்பட்டுள்ள ஆழ்ந்த யோகா அறிவியலின் வெளிப்பாடு.

எல்லா வயதினருக்கும் பொதுவான தன்மையில் வடிவமைக்கப்பட்டிருக் கும் இந்த பயிற்சி, மனிதன் தனது அடிப்படை சக்தியை நன்கு உணர வும் அதனை முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ளவும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

## தன்னை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மனிதனை யாரும், எதுவும், அடிமைப்படுத்திவிட முடியாது

உலகின் பல பகுதிகளிலும் பரவி யுள்ள சஹஜ ஸ்திதி யோகா தன்னை உணர்வதற்கான அமைதிப் புரட்சி என்று அழைக்கிறோம். இந்த அமை திப்புரட்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறேன். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# "அனைத்து வேட்பாளரையும் நிராகரிக்கும் உரிமை" - இந்திய தேர்தல் சீர்திருத்தம்

...அது என்ன? வாக்களிக்கும் உரிமை சட்டபூர்வ உரிமை என்றாலும் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்று ஒரு வாக்காளர் முடிவு எடுப் பார். அப்படி அவர் எடுக்கும் முடிவு அரசியல் சட்டப் பிரிவு 19 (1) (a) இன் கீழ் உள்ள கருத்துச்சுதந் திரத்தின் கீழ் வருவதால் அது ஒரு அரசியல் சட்ட உரிமை என்று ஏற்கனவே ஒரு வழக்கில் உச்சநீதிமன்ற நீதியரசர் எம்.பி.ஷா கொடுத்த தீர்ப்பை மேற் காட்டி இந்த வழக்கில் வலியுறுத் திக் கூறியிருக்கிறார்கள். அதே அரசி யல் சட்டப் பிரிவு 21 இன் கீழ் வரும் தனிமனித சுதந்திரத்திலும் வருகிறது. ஆகவே அந்த முடிவு எடுக்கும் வாக் காளரின் உரிமை அரசியல் சட்டத் தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அடிப் படை உரிமை மற்றும் அரசியல் சட்ட உரிமை. அதனால் இந்த மனுவை உச்சநீதிமன்றம் விசாரிப்பதில் எந்த தடையும் இல்லை என்று ஒரு புரட்சி கரமான தீர்ப்பை வழங்கினார்கள்.

### வாக்குச்சீட்டு இரகசியம் யாருக்கு?

இப்படித்தான் யாருக்கும் வாக் களிக்க விரும்பவில்லை என்ற உரிமை கோரும் இந்திய வாக்காளரின் போராட்டம் 18 ஆண்டுகளுக்கு பிறகு முடிவுக்கு வந்திருக்கிறது. இப்போது போட்டியிடும் எந்த வேட்பாளரும் வாக்காளருக்குப் பிடிக்கவில்லை என் றால் அவர் அவர்களுக்கு வாக்களிக் காமல், எலெக்ரானிக் வோட்டிங் மெஷினில் சுப்ரீம் கோரட் பொருத்த உத்தரவிட்டுள்ள NOTE (None of above) பொத்தானை அழுக்கி வாக்களித்து விட்டுவந்து விடலாம். இதில் இன் னொரு சிறப்பம்சமும் உண்டு. ஏற் கனவேச இந்திய மக்கள பிரதிநிதித்து வச் சட்டத்தில் 49 (0) என்ற நெக் கட்டிவ் வோட்டிங் முறை இருந்தது. ஆனால், அதில் யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை என்று நினைப்பவர் நேராக வாக்குச் சாவடிக்குப்போகவேண் டும். அங்கே ஒரு 17(a) என்று ஒரு படிவம் இருக்கும். அதை வாங்கி வாக்காளர் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அந்த விவரத்தை வாக்குச் சாவடியில் இருக் கும் தேர்தல் அதிகாரி தன்னிடம் உள்ள பதிவேட்டில் எழுதிக் கொள்வார்.

அத்துடன் விவகாரம் முடிந்துவிடும். ஆனால், இந்த முறை வாக்காளருக்கு உள்ள வாக்குச் சீட்டு இரகசியத்தை பாதிக்கிறது. ஆகவே இந்த 49 (0) விதி அரசியல் சட்டத்திற்கு புறம்பானது என்று தற்போதைய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சுட்டிக்காட்டியுள்ளது. வாக்குச் சீட்டு இரகசியம் வாக்களிக்க வருப வருக்கு மட்டுத்தான் உண்டு என்று வாதிட்ட மத்திய அரசின் வாதத்தை நிராகரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், வாக்குப் போட விரும்பவில்லை என்று கூறும் வாக்காளருக்கும் வாக்குச் சீட்டு இரகசியம் உண்டு என்று கூறி அவர் களுக்கு என்று எலெக்ட்ரோனிக் வோட் டிங்க மெஷினில் NOTE என்று தனி பட்டன் அமைக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறது.


### தீர்ப்பின் எதிரொலி- அரசியல் கட்சிகள் திருந்துமா?

இந்த உத்தரவுக்கு இந்திய சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தெரிவித்துள்ள முக்கிய காரணங்கள் என்னவென்றால் அரசியல் கட்சிகள் நல்ல வேட்பாளரை தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும். அதேபோல் தேர்த லில் இந்த வேட்பாளருக்குப் போய் வாக்களிக்க வேண்டுமா என்று வாக் காளர்கள் வெறுத்து ஒதுங்காமல் வாக்குச் சாவடிக்கு வந்து போட்டி யிடும் வேட்பாளர் யாருமே எனக்குப் பிடிக்கவில்லை என்று வாக்களிக்கும் உரிமை வரும். அதனால் தேர்தலில் பங்கேற்கும் வாக்காளர்களின் எண்ணி க்கை உயரும். தேர்தல் பங்கேற்புதானே ஜனநாயகத்திற்கு முக்கியம். அது இந்த யாருக்கம் வாக்களிக்க விரும்பவி ல்லை என்ற உரிமையை பிரயோகப்படுத்து வதன் மூலம் கிடைக்கும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள்.

### 14- வது நாடாக பட்டியலில் சேர்ந்த இந்தியா

இதுவரை ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள 13 நாடுகள் இந்த நெகட்டிவ் வோட் டிங் முறை இருக்கிறது. பிரான்ஸ், பெல்ஜியம், பிரேசில், கிரீஸ், உக்ரேன், சிலி, பங்களாதேஷ், ஸ்டேட் ஆப் நாவ்டா- யு.எஸ்.ஏ, பின்லாந்து, ஸ்வீடன், ஸ்பெயின், கொலம்பியா, யு.எஸ்ஏ. இந்த நாடுகளின் பட்டியலில் இப் போது இந்தியாவும் சேர்ந்திருக்கிறது.

இந்திய தேர்தல் வாக்குச் சீட்டு முறையிலிருந்து 1998 க்கு மேல் மின்னணு வாக்கு இயந்திரத்தில் வாக் களிக்கும் முறைக்கு மாறியது. அதே போல் கள்ள வாக்கைத் தடுப்பதற்காக அடையாள அட்டையை தேர்தல் கமி ஷனே வழங்கும் முறை அமலுக்கு வந்தது. மின்னணு வாக்கு இயந்திரத்திலும் தில்லு முல்லுகள் நடக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் வந்ததைத் தொடர்ந்து வாக்காளர் வாக்களித்தவுடன் இன்னாரு க்கு வாக்களித்தோம் என்ற ஒப்புகை வழங்க வேண்டும் என்ற ஸ்கீம் நடை முறைக்கு வந்தது. நாகாலந்து மாநிலத் தில் உள்ள நோஸ்கான் சட்டமன்றத் தொகுதியில் இந்த முறை சமீபத்தில் முதல் முதலாக அமுலுக்கு வந்தது. இப்போது போட்டியிடும் வேட்பாளர் கள் யாரும் பிடிக்கவில்லை என்றால் யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை



என்று வாக்களிக்கும் உரிமையும் இந் திய வாக்காளருக்கு வழங்கப்பட்டி ருக்கிறது.

### புதுப்பொலிவுடன் இந்திய ஜனநாயகம்!


இது ஒரு புறமிருக்க, தேர்தலில் குற்றவாளிகள் போட்டியிடாமல் இருப்பதற்கு போட்டியிடும் வேட்பா ளர் தன்னைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் தெரிவிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டுத்தான் முன்பு தீர்ப்பளித்தது. அதைத் தொடர்ந்து எம்.பி. அல்லது எம்.எல். ஏவாக இருப்ப வர்கள் குற்றவழக்கில் தண்டிக்கப்பட் டாலும் அவர்கள் அந்த தீர்ப்பை எதிர் த்து அப்பீல் செய்துவிட்டால் பதவி பறிபோகாது என்று இந்திய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் ஒரு பாது காப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த பாதுகாப்பையும் இந்திய சுப்ரீம் கோர்ட் ரத்து செய்துள்ளது. தேர்தலில் போட்டியிடுவோர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றோர் அனைவருக்குமே பல கட்டுப்பாடு களை விதித்து இந்திய தேர்தல் முறையை சீர்திருத்தி வருகிறது இந்திய சுப்ரீம் கோர்ட். அதுவே இந்திய ஜனநாயகத்தின் புதுமைக்கு முக் கியமான காரணம் என்றால் மிகை யாகாது. (முற்றும்)

எம்.காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலால் வடக்கு மாகாண மீன்பிடி தொழிலாளர்கள் பாதிப்பு



## அமைச்சர் ராஜித இந்துவுக்கு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்து மீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுதல் வடமாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறதென்று கடற்றொழில் நீர்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் இது தொடர்பாக இந்தியாவின் ''இந்து'' ஆங்கில தினசரிக்கு அளித்த பேட்டியிலேயே குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது,

இலங்கை மீனவர்கள், இந்திய கடல் எல்லையில் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடித்து இந்திய கடற்படையினால் கைது செய்யப்படும் போது அம்மீனவர்கள் எம்மிடம் தமக்கு உதவுமாறு கேட்பார்கள்.

அதற்கு நாம் நீங்கள் சட்ட விரோதமாக இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்த குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டிருக்கிறீர்கள். இதற்கு நாம் எதுவும் செய்ய முடியாது. குற்றமிழைத்த நீங்கள் அதன் பலாபலன்களை அனுபவிக்க வேண்டும் என எமது மீனவர்களுக்கு கூறிவருகின்றோம்.

இரு நாடுகளின் கடற்றொழிலாளர்களையும் ஓரிடத்தில் சந்திக்க வைக்க வசதி செய்து இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உதவுவோம் என்று இந்தியா முன்னதாக எங்களுக்கு அளித்த வாக்குறுதியை இன்னமும் நிறைவேற்றவில்லை என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், விரைவில் இந்தியா கடற்றொழிலாளர்களின் கூட்டுச் செயலணியின் கூட்டத்தை நடத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

ஒரு நாட்டின் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடிக்கும் சட்ட விரோத செயற்பாடுகளுக்கு நீண்டகால தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு இரண்டு அரசாங்கங்களும் ஒன்று சேர்ந்து இரு நாட்டு மீனவர்களையும் சந்திக்க வைப்பது அவசியம். இத்தகைய சந்திப்புக்களை 6 மாதங்களுக்கு ஒரு தடவை நடத்துவது பொருத்தமுடையதாகும்.


2012 ஆம் ஆண்டு இலங்கை இத்தகைய கூட்டு செயற்குழுக் கூட்டத்தை நடத்தியதென்றும் அடுத்த கூட்டத்தை இந்தியாதான் நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடித்த 32 இந்திய மீனவர்கள் கைதானமை குறித்து இந்து பத்திரிகை நிருபர் கேட்டகேள்விக்கு மேற்கண்ட பதிலை அமைச்சர் கொடுத்தார்.

இந்தியாவின் வடகிழக்கு கடல் எல்லையில் புல்மோட்டைக்கருகில் சட்டவிரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த 32 மீனவர்களைக் கைது செய்த இலங்கைக் கடற்படையினர் அவர்களின் நான்கு இழுவைக் கப்பல்களையும் தடுத்து வைத்துள்ளனர்.

இதற்கு முன்னர் கடந்த திங்களன்று இராமேஸ்வரத்திலிருந்தும் புதுக்கோட்டையிலிருந்தும் கடலுக்குச் சென்ற 37 மீனவர்கள் தலைமன்னாருக்கு அப்பால் நெடுந்தீவுக்கு அருகில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது பற்றி தகவல் தெரிவித்த இலங்கை கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய, கடந்த சில வாரங்கள் இந்திய மீன்பிடி இழுவைக் கப்பல்கள் அதிகமாக இலங்கை கடல் எல்லைக்குள் அத்து மீறி பிரவேசித்து மீன்பிடித்து வருகின்றன எனக் கூறினார். (அ-2)



யாழ். வலய கல்வித் திணைக்களத்தினரின் உலக உளநலதின நிகழ்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. அந் நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரி வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் நா.கு.மகிழ்ச்சிகரனின் இயக்கத்தில் உருவான பாடங்கள் என்ற குறும் படம் வெளியிடப் படுவதை செய்யப்படுவதை படத்தில் காணலாம்.

## இலங்கை தமிழர்களையும் நாம் காப்பாற்ற வேண்டும் நரேந்திரமோடி தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கை தமிழர்கள் போன்று பல்வேறு நாடுகளில் துன்பப்படும் இந்திய வம்சாவளிகள் பாதுகாக்கப்படல் அவசியம் என்று பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் மாலை சென்னையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்,

இந்திய கலாசாரம், உறுதித் தன்மை, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

அத்துடன்வெளிநாட்டுக்கொள்கை வகுக்கப்படும் போது, இந்தியாவில் உள்ள மாநிலங்களின் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.



ஒரு நாடு தங்களின் குடிமக்களை பாதுகாப்பதுடன் இதர நாடுகளில் உள்ள நம் மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

அவர்கள் வேறு நிறத்தில் உள்ள பாஸ்போர்ட்களை வைத்திருக்கலாம்.

ஆனால் நமது இரத்தத்தின் நிறம் ஒன்றுதான். இலங்கை தமிழர்கள் உட்பட அயல் நாடுகளில் வாழும் இந்திய வம்சாவழியினரை நாம் காப்பாற்ற வேண்டும் என அவர் கூறினார்.

இதன் போது மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையைக் கடுமையாகத்தாக்கி உரையாற்றினார். (அ-2)

## வடக்கு இராணுவத்தினர் மீது அபாண்டமான குற்றச்சாட்டு

### இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் படையினரால் தமிழ் பெண்கள் மற்றும் யுவதிகள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என்று இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னத்தை குறைக்கும் நோக்கிலேயே இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாக வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டுக்காலப்பகுதியில் படையினர் சம்பந்தப்பட்ட ஐந்து பாலியல் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தக்காலப்பகுதியில் பாலியல் வன்மு றைகள் தொடர்பில் 119 சம்பவங்கள் வரை இடம்பெற்றன.

இந்நிலையில் படையினர் சம்பந்தப்பட்ட ஐந்து பாலியல் வன்முறை சம்பவங்களில் நான்கு சிங்கள பெண்களும் ஒரு தமிழ் பெண்ணும் பாதிக்கப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 256 பாலியல் வன்முறை சம்பவங்கள் வடக்கில் இடம்பெற்றுள்ளன.

இதில் 6 சம்பவங்கள் படையினர சம்பந் தப்பட்டவையாகும்.

இதிலும் மூன்று சிங்கள பெண்கள் இரண்டு தமிழ் பெண்கள் மற்றும் ஒரு முஸ்லிம் பெண்ணும் பாதிக்கப்பட்டார்.

இந் நிலையில் சம்பவங்களில் தொடர்புடைய படைவீரர்கள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ருவான் வணிக சூரிய குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சீரற்ற காலநிலை நீடிக்க வாய்ப்பு

நாட்டில் தற்போது நிலவுகின்ற சீரற்ற காலநிலை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த காலப்பகுதியில் இடி, மின்னல் தாக்கமும் அதிகரித்தி ருக்கும் என்றும் நாட்டின் சில பாகங்களில் 100 மில்லிமீற்றர் மழைபெய்யும் என்றும் அந்த நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

காற்றின் வேகம் மணித்தியாலயத்திற்கு 68கிலோமீற்றர் இருக்கும் என்பதனால் கட லுக்கு செல்வோர் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது. (செ-11)

## மாநாட்டை இலங்கையில் நடத்த வலியுறுத்தியது இந்தியாதான்

### தூதரக அதிகாரிகள் தகவல்

அவுஸ்திரேலியாவில் கடந்த 2011ஆ ம் ஆண்டு பொதுநலவாய மாநாடு நடைபெற்றபோது அடுத்த மாநாட்டை இலங்கையில் நடத்த வலியுறுத்தியதே இந்தியாதான் என்று தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் பல கட்சிகள், தமிழ் அமைப்புகள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் மத்திய அரசு இன்னமும் தனது நிலைப்பாட்டை தெளிவாக தெரிவிக்கவில்லை. இந் நிலையில் இது குறித்து தூதரக அதிகாரிகள் கூறுகையில்,

கடந்த 2011ஆம் ஆண்டு பொதுநலவாய மாநாடு நடந்த போது அடுத்த மாநாட்டை கொழும்பில் நடத்த வேண்டும் என்று இந்தியா தான் லண்டன், கனடா மற்றும் அவுஸ்திரேலியாவிடம் வலியுறுத்தியது என்றனர்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து பிரதமர் மனமோகன் சிங் விரைவில் முடிவு எடுப்பார் என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டின் போது எம்மீது அழுத்தம் கொடுக்க முடியாது

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

**பொதுநலவாய மாநாடென்பது பல்தரப்பு பேச்சுவார்த்தைகளுக்குமுரிய களமே தவிர ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது அழுத்தம் செலுத்துவதற்கான இடமல்லவென வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரும் மேலதிக செயலாளருமான ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் உள்விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த பிரிட்டன் எப்போது வேண்டுமானாலும் இலங்கைக்கு வரலாம். இதற்காக பொதுநலவாய மாநாடு ஒன்று நடைபெறும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்ற விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே பிரிட்டன் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பதாக கொழும்பிற்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் வெளிநாட்டு செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சின் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னி யுத்தம் முடிவடைந்து 4 வருடங்களுக்குப் பின்னர் அமைதியாகவிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கையின் மனித உரிமைகள் பற்றி பேசுவதற்கு பொதுநலவாய மாநாடொன்று இங்கு நடக்கும் வரை காத்திருந்தமை ஆச்சரியமளிப்பதாகவும் கூறினார்.

இலங்கை மக்கள் மீது பிரிட்டிஷ் அரசாங்கம் அக்கறை கொண்டிருக்குமாயின் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அல்லது பிரதமர் ஏற்கனவே இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தி கள நிலவரங்கள் தொடர்பிலும் நேரில் ஆராய்ந்திருக்கலாமென அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு பல வெளிநாட்டு பிரதிநிதிகள் அடிக்கடி விஜயம் மேற்கொண்டு கள நிலவரங்களை கண்டறிந்து சென்றுள்ளனர். அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை இலங்கை வந்திருந்தார். இவர் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு செல்வதற்கு நாம் ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்ததுடன் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருந்தோம்.

உயர்மட்ட அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்து அரச தலைவர்களுடன் பேச்சு நடத்துவதன் மூலம் தமது தனிப்பட்ட கருத்துக்களை அரசாங்கத்துக்கு தெரிவிக்க முடியும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் ஜனநாயகத்தை பெற்றுக் கொடுக்காதது போல்தான் சில வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

வடக்கில் வெற்றிகரமாக தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. வடமாகாண சபையின் முதலமைச்சர் ஜனாதிபதி முன்னிலையில் தனது பதவியையும் கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமை அரசியல் தீர்வு மற்றும் நல்லிணக்கத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டு என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# அமெரிக்காவின் முடிவு இலங்கைக்கு ஆறுதல்

## அமைச்சர் பஷில்

அமெரிக்காவின் கடன் எல்லையை அதிகரிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதியும் செனட்டும் எட்டிய உடன்பாடு அமெரிக்க திறைசேரி உண்டியலில் வெளிநாட்டு ஒதுக்குகளை முதலீடு செய்த இலங்கைக்கு பெரும் ஆறுதலளித்துள்ளது என அமைச்சர் பஷில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கடன் எல்லையை அதிகரிக்க முடிந்தமையால் அமெரிக்க அரசாங்கம் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத வங்குரோத்து நிலை ஏற்படுவதை தவிர்த்துக் கொண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி அமெரிக்காவின் உண்டியலில் முதலீடு செய்திருந்தமையால் அமெரிக்காவில் நடைபெறுவதை கவனமாக அவதானித்து வந்தோம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் கடன் நெருக்கடி மோசமடைந்திருப்பின் இலங்கையின் முதலீட்டுக்கான கொடுப்பனவுகளை அமெரிக்காவால் செய்ய முடியாது போயிருக்குமென அமைச்சர் கூறினார்.

அமெரிக்காவின் கடன் எல்லையை அதிகரிப்பதற்கான பிரேரணையை செனட்டும் பிரதிநிதிகள் சபையும் இறுதி நேரத்திலாவது அங்கீகரித்ததன் மூலம் பெரும் உலக நெருக்கடி தவிர்க்கப்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார். (அ-2)

# வாகன விபத்தில் இருவர் பலி

தனமல்வில-உடவலவ பிரதான வீதியில் 19 ஆம் கட்டை பிரதேசத்தில் நேர்-எதிர் திசையில் பயணித்த இரு வான்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இவ் விபத்தில் மேலும் அறுவர் படுகாயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் 17 வயது சிறுவனும் 34 வயது பெண்ணும் உயிரிழந்துள்ளனர்.

விபத்தை அடுத்து இரு வான்களினதும் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தனமல்வில பொலிஸார் தெரிவித்தனர். (செ)





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட மட்ட பிரதேச இளைஞர் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் கடந்த மூன்று தினங்கள் இருபாலை சங்கமம் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்வில் 15 பிரதேச சம்மேளனங்களைச் சேர்ந்த சுமார் 50 இளைஞர் தலைவர்கள் இப்பயிற்சிகளில் கலந்து கொள்கின்றனர். இப்பயிற்சிகளின் ஆரம்ப வைபவத்தில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் தலைமைத்துவப் பயிற்சியின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# சந்திரிகாவுடன் தொடர்புகளை பேணுவோரின் விபரம் வெளியாகும்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் தொடர்புகளைப் பேணிய அமைச்சர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய விசேட ஒழுக்க விதிகள் பற்றிய விளக்கமொன்றும் அளிக்கப்பட உள்ளது.

அமைச்சர்கள் சந்திரிக்காவுடன் நடத்திய தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்பட் டுள்ளதாகவும் ஏனைய ஆதாரங்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபரங்கள் முழுமையாக வெளியிடப்பட உள்ளன.

ஆளும் கட்சியின் சில முக்கிய அமைச்சர்கள் தொடர்ந்தும் சந்திரிக்காவுடன் இரகசியமாக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வரும் அமைச்சர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அமைச்சர்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழு இறுதித் தீர்மானம் எடுக்கும் என குறிப்பிடப்படுகிறது.

அமைச்சர்கள் பற்றிய தகவல்களை புலனாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ளனர். (அ-2)

# இலங்கையின் அபிவிருத்திக்கு தென் கொரியா பாராட்டு

(கொழும்பு)

அண்மைக்காலங்களில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் பாராட்டத்தக்கவை என்று தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் யுன் பயுன்க் சீ தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் தென்கொரியா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசை சியோலில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு பாராட்டியுள்ளார்.

இலங்கையுடனான உறவை மேம்படுத்துவதுடன் வழங்கி வரும் உதவிகளை விரிவுபடுத்த அந்நாட்டு அரசு விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடிய வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான உதவிகளை அதிகரிப்பது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தினர்.

இச்சந்திப்பின் போது கொரிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனமான கொய்க்கா இலங்கையின் அடிப்படை கட்டுமான வசதிகள் நகர அபிவிருத்தி குப்பைகளை அகற்றுதல் போன்றவற்றுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றமையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். அத்துடன் இலங்கையர்களுக்கு கொரியாவில தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் 14 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் அந்நாட்டு ஜனாதிபதி பாக் கெவுன் ஹய்யையும் சந்தித்து கலந்துரையாடினர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்மான் குர்ஷித்தின் பயணம் இலங்கையில் சாதித்தது என்ன?



13- வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தோ, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தோ, நாடாளுமன்றத் தெரிவுக் குழுதான் முடிவு செய்யவேண்டும் என்று ஒரே போடுபோட்டு, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை திருப்பி அனுப்பி வைத்துள்ளார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

காலத்துக்குக் காலம் தெரிவுக் குழுக்கள், அணைக்குழுக்கள் என்று நியமித்து, இனப்பிரச்சினையை இந்தளவுக்குக் கொண்டு வீந்துவிடக் காரணமான, சிங்களத் தலைமைகளின் வழக்காமான இழுத்தடிப்பு உத்தியை மீண்டும் ஜனாதிபதி கையில் எடுத்திருக்கிறார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் கொழும்புப் பயணம் திட்டமிடப்பட்ட போதே, 13-வது திருத்தச்சட்டம், தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு குறித்துப் பேசுவது அவரது நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டது. ஆனால், இந்த விடயங்களில், இலங்கை அரசாங்கத்துடன் எத்தகைய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு, அல்லது உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொண்டு அவர் புதுடெல்லி திரும்பினார் என்ற கேள்வி உள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் பயணத்தில் வெற்றிகரமாக அமைந்த ஒரே விடயம். சம்பூர் அனல் மின்னிலையம் தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டதுதான். அதற்கு அப்பால், சல்மான் குர்ஷித்தின் பயணம், எதையும் சாதித்துள்ளதாக உணர முடியவில்லை.

13-வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியம் என்றும், 13 -வது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அதிகாரங்களைப் பகிரும் உறுதிமொழியைக் ஏற்கனவே, கொடுத்திருந்தமைக்கொப்ப, அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பங்களை அவர், அலரி மாளிகைச் சந்திப்பில் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், 13-வது திருத்தச் சட்டம் மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயங்களில், தனக்கு எந்தப் பொறுப்பும் இல்லாதது போன்று தட்டிக் கழித்துவிட்டார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. அதுவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக, உள்ளக முரண்பாடுகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, வடக்கு மாகாண முதல்வரை, ஜனாதிபதி முன் பதவியேற்க வைத்த மறுநாளே, ஜனாதிபதி, இவ்வாறு நடந்துகொண்டுள்ளார்.

13-வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது, இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது, என்று எல்லாவற்றையுமே, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே கவனித்துக்கொள்ளும் என்றும் அலட்சியமாகவே அளிக்கப்பட்டுள்ள பதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டுமன்றி, இந்தியாவையும் நிச்சயம் ஏமாற்றம் கொள்ள வைத்திருக்கும். எனென்றால், நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக உள்ள சிக்கல்களையும், ஆபத்துக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ள நிலையிலும் எப்படியும், அதற்குள் இறங்கித் தீக்குளித்தேயாக வேண்டும் என்ற பிடிவாதத்தை அரசாங்கம் இன்னமும் விட்டுவிடவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு, தமிழர்தரப்பின் எதிர்பார்ப்புகளை நியாயமான முறையில் விவாதிக்கும் களமாக இல்லாததே, அதற்குள் இறங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்குவதற்கான காரணம். இன ரீதியாகவும், கட்சி ரீதியாகவும் அங்கு தமிழர் தரப்பின் நியாயங்கள் எடுபட வாய்ப்பில்லை. இந்த உண்மையை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் உணர்ந்துள்ளதால் தான், தமிழ்த் தேசியத் கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவுக்குச் செல்லுமாறு அந்த நாடுகள் அழுத்தம் கொடுக்கவில்லை. இதனால், இந்த தெரிவுக்குழுக்கள், எந்தப் பயனுமின்றி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தெரிவுக்குழுவுக்கு மீள உயிர் கொடுப்பதன் மூலம், 13-வது திருத்தச்சட்டம் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த நெருக்கடிகளிலிருந்து தப்பிக்கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முனைகிறார். இந்த விவகாரங்கள் தொடர்பான தனது நிலைப்பாடு என்ன என்பதைக் கூட அவர் வெளியிடத் தயாராக இல்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நினைத்திருந்தால், தமிழர் தரப்பு அச்சம் கொள்ளாத வகையில் தெரிவுக் குழுவை நியமித்திருக்க முடியும். குறைந்தபட்சம் இன ரீதியான சம அளவு பிரதிநிதித்துவம், கொடுத்திருந்தால், ஒருவேளை, கூட்டமைப்புக்கு இத்தகைய அச்சம் ஏற்பட்டிருக்காது. அல்லது தனது கருத்தையும் வெளியிட்டு, குறிப்பிட்ட உரிமைகளுக்கு தெரிவுக்குழு உத்தரவாதம் அளிக்கும் என்று ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தால் கூட, தெரிவுக் குழுவுக்குச் செல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்மதித்திருக்கலாம். இவை எதையும் செய்யாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசமுடியாது, எதை வேண்டுமானாலும் அவர்கள் தெரிவுக் குழுவில் வந்து பேசட்டும் என்று தெரிவுக்குழுவையும், இனச்சிக்கலுக்கு தீர்வு காணும் முயற்சிகளையும் முடக்கிப்போட்டது அரசாங்கம் தான்.

அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டு வாக்களித்திருந்த போதிலும், வடக்கு மாகாணசபையைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கத்துடன் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்காமல், மென்போக்கில் செயற்படத் துணிந்துள்ள சூழலில் கூட, அரசாங்கம் தனது நிலையை விட்டு விலகத் தாயராக இல்லை.

இந்தியாவைப் பொறுத்தவரையில், 13-வது திருத்தமும் பறிபோய்க் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறது. ஆனால், அதற்கெதிராக எதையும் செய்யத் தயாராக இல்லாதது அதன் பலவீனம். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, 13-வது திருத்தம் குறித்து முடிவெடுப்பது கூட, தெரிவுக்குழு தான் என்று கூறி நழுவிக் கொண்டிருக்கிறார். இதன் மூலம், இந்த விவகாரத்தை முடிவு காணாமல் இழுத்தடிப்பதில் வெற்றி கண்டுவிட்டார் என்று சிங்கள மக்கள் மத்தியிலும் தனது சாக்கள் மத்தியிலும் அவர், நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றிருக்கலாம். ஆனால், தமிழ் மக்களோ, இந்தியாவோ, சர்வதேச சமூகமோ, அவ்வாறு நினைக்கப் போவதில்லை. நல்லிணக்கத்துக்கான வாய்ப்புகளை அவர் மீண்டும் தவறவிடுகிறார் என்றே இது கணிப்பிட வைக்கும்.

போர் முடிவடைந்தவுடன், அரசாங்கத்திடம் அமெரிக்கா வலியுறுத்திய விடயங்கள் இரண்டு,

முதலாவது, நல்லிணக்கம்.

இரண்டாவது, பொறுப்புக் கூறல்.

கடந்த நான்கு ஆண்டுகளில் அரசாங்கம், இந்த இரண்டு விடயங்களில் எதையும் செய்யாததால் தான், ஜெனிவாவில் இரண்டு தீர்மானங்களை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஆனாலும் அரசாங்கம், தனது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. எப்படியெல்லாம் காலத்தைக் கடத்தலாம், அதிகாரப்பகிர்வை தட்டிக் கழிக்கலாம், என்பதிலேயே அரசாங்கத்தின் கவனம் இருக்கிறது. இது இந்தியாவைப் பொறுத்தவரையில் ஏமாற்றமளிக்கின்ற ஒன்றாகவே இருக்கும். ஏனென்றால், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இந்தப் பயணம் குறித்து, புதுடெல்லி திரும்பியதும் எதுவுமே கூறவில்லை. இதுவே இந்தியாவின் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை அரசின் பிடிவாதம் இந்தியாவுக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தாலும், அதை எப்படி வெளிக்காட்டப் போகிறது என்பதே இப்போதுள்ள கேள்வி. இதற்கு இந்தியாவிடம் இப்போதைக்கு உள்ள ஒரே துருப்புச் சீட்டு கொமன் வெல்த் மாநாடு தான்.

அதில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்கமாட்டார் என்பதுதான் தற்போது பேசப்படும் செய்தியாக உள்ளது.

ஒரு பக்கத்தில் கொமன்வெல்த் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்ற அழைப்புகள் விடுக்கப்படும் சூழலில், இலங்கை அரசுக்கு பதிலடி கொடுப்பதற்கான வாய்ப்பாக அவர் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதேவேளை, அற நனைந்தவனுக்கு கூதலும் குளிரும் இல்லை என்பது போல, இப்போது அரசாங்கத்துக்கும் குளிர் விட்டுப்போய் விட்டது.

மன்மோகன்சிங் வந்தாலென்ன வராது போனாலென்ன என்ற அளவுக்கு கொழும்பு வந்துவிட்டதாக தெரிகிறது.

இத்தகைய நிலையில், கொமன் வெல்த் மாநாட்டில் மன்மோகன்சிங் பங்குபற்றினாலும் சரி, பங்கேற்காது போனாலும் சரி, 13 -வது திருத்தச் சட்ட விவகாரத்தில் இந்தியாவினால் எதையும் செய்ய முடியும் போலத் தெரியிவில்லை.

இந்தியாவினால் தான், வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டது என்று மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தர்ர். வடக்கில் தேர்தல் நடத்துவதை உறுதிப்படுத்த முடிந்த இந்தியாவினால், அந்த மாகாணசபைக்குரிய அதிகாரங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருப்பது பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கை இன்னொரு முறை கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது.

-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

# 18.10.2013–16.11.2013



## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

**பாடுபட்டால் பலம் உண்டு என்று சொல்லும் மேட இராசி நேர்களே! பிள்ளைகளால் பெருமை சேரும்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்தில் ஜென்ம இராசியில் கேதுவும் 7 ஆம் இடத்தில் இராகுவும் சஞ்சரித்து சர்ப்ப கிரக ஆதிக்கத்தை உருவாக்குகிறார்கள். பஞ்சமாதிபதி சூரியனும் இராகுவும் இணைந்திருக்கிறார்கள். எனவே, தொழிலில் ஒரு நாள் இலாபம், மறுநாள் விரயம் என்ற நிலை ஏற்படலாம். சேமிக்க முடியவில்லையே என்ற கவலை மேலோங்கும்.

என்ன இருந்தாலும் உங்கள் இராசி நாதன் செவ்வாய் நீச்சத்திலிருந்து விடுபட்டு இப்பொழுது 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வலிமை இழந்த செவ்வாய் ஓரளவு வலிமை பெறுவதால் போராடியேனும் ஒருசில காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். எடுத்த காரியத்தையும் எடுத்தவுடன் முடிக்க முடியுமா? என்பது சந்தேகம்தான். ஒருசில காரியங்கள் வி.ஐ.பிக்களின் ஒத்துழைப்போடு முடிவடையக் கூடியதாக இருக்கும்.

எல்லாவற்றிற்கும் காரணம் சர்ப்ப தோஷத்தின் பிடியில் கிரகங்கள் சிக்கியிருப்பதுதான். அதே நேரத்தில் குருவின் பரிபூரண பார்வை சப்தம ஸ்தானத்தில் உள்ள ராகுவின் மீது பதிகிறது. எனவே, பார்க்கும் குருவைப் பலப்படுத்தினால் பயணங்களில் தடைகள் ஏற்படும். பக்கபலமாக இருப்பவர்கள் விரைந்து வந்து உதவி செய்வர். சீராக தொழில் நடைபெறும்.

3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்ர கதியில் இருப்பது யோகம்தான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கிணங்க நீங்கள் திட்டமிடா்த சில காரியங்கள் வெற்றி பெறும். பெண் பிள்ளைகளின் திருமணத்திற்கு வரன் வந்து அலைமோதும். நண்பர்கள் தொழில் கூட்டாளியாக உங்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புவதாகச் சொல்வார்கள். இப்படி கற்பனைகூட செய்து பார்க்க முடியாத சில காரியங்கள் இப்பொழுது அற்புதமாக நடைபெறத் தொடங்கலாம்.

ஒக்டோபர் 25 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். 3,6 க்கு அதிபதி வக்ரம் பெறுவது யோகம்தான். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். உத்தியோக மாற்றம், தொழில் மாற்றம், ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம்.

**தனுசு இராசியில் சுக்ரனின் சஞ்சாரம்!**


உங்கள் இராசிக்கு 2,7 க்கு அதிபதியான சுக்ரன் 9 ஆம் இடத்தில் ஒக்டோபர் 31 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பணப் புழக்கம் அதிக்கரிக்கும். வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ வழியமைக்கும். பெண்வழி ஒத்துழைப்போடு சில பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

**சப்தம ஸ்தானத்தில் புதனின் சஞ்சாரம்!**

வக்ர நிவர்த்தியான புதன் மீண்டும் துலாம் இராசியில் நவம்பர் 3 ஆம் திகதியில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக குடும்ச் சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் கூடுதல் செலவுகள் ஏற்படும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். வாழ்க்கை துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். பயணங்கள் அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்புக் கிட்டும். இம் மாதம் மந்தன் சனி வலிமை இழந்திருப்பதால் சிந்தனைகள் வெற்றி பெற அனுமனை வழிபடுவது நல்லது.

## கற்பனைகூட செய்து பார்க்க முடியாத காரியங்கள் சில அற்புதமாக நடைபெறும்

## சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**நட்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இடப இராசி நேயர்களே! சுபச் செலவுகள் அதிகரிக்கும்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் சுக்ரன் உங்கள் இராசியைப் பார்க்கிறார். சகாய ஸ்தானாதிபதி சந்திரன் லாப ஸ்தானத்திலிருந்து மாதம் தொடங்குகிறது. எனவே, நீங்கள் தீட்டிய திட்டங்களில் வெற்றி கிடைக்கும். திடீர், திடீர் என்று இலாபங்கள் வந்து சேரும். பயணங்களால் பலன் கிடைக்கும் விதத்தில் செவ்வாய் சஞ்சாரமும் இருக்கிறது.

என்ன இருந்தாலும் 2,5 க்கு அதிபதியான புதன் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அது மட்டுமல்லாமல் 9,10க்கு அதிபதியான சனியும் கொஞ்சம் வலிமை இழந்து இருக்கிறார். எனவே, தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பழைய தொழிலை விட்டுவிட்டு புதிய தொழில் தொடங்குவதில் ஒருசிலர் ஆர்வம் காட்டுவர். 06.11.2013 வரை சனி வலிமை இழந்து இருக்கிறார். அதன்பிறகு பொதுவாக மாதக் கடைசியில் உங்கள் எண்ணங்கள் ஈடேறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

6 ஆம் இடத்தில் இராகு இருப்பதால் எதிரிகளால் உங்களுக்கு நன்மை கிட்டும். அரசுவழிச் சலுகைகளில் இருந்த தாமதங்கள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் வரும். ஆனால், அவற்றை நவம்பர் 7 க்கு மேல் ஒப்புக் கொள்வதே நல்லது. அதற்கிடையில் ஏற்றுக்கொண்டால் வலிமையிழந்திருக்கும் சனி வருமானத் தடைகளை கொடுக்கலாம். பொதுவாக கிரகங்கள் வக்ர இயக்கத்தில் இருந்தாலும் அஸ்தமனத்தில் இருந்தாலும் இவை யோகம் தரும் கிரகமாக அமையும் பட்சத்தில் அக்கிரகங்கள் வலிமையடையும்வரை பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது மாதக் கடைசியில்தான் உங்களுக்கு மன அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். பொதுவாக சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிக் கவசம் பாடி சனியை வழிபாடு செய்யலாம். முடிந்தால் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வரலாம். அதேபோல் தன ஸ்தானாதிபதி வக்ரம்பெற்று இருப்பதால் ஸ்ரீமன் நாராயணனை நீங்கள் வழிபாடு செய்வது நல்லது. கந்த சஷ்டி கவசம் பாடி முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் கவலைகளில் ஒரு பகுதியை குறைத்துக் கொள்ளலாம்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 25 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்ரம் பெறுகின்றார். பின்னோக்கிச் செல்லும் இந்த புதனின் பலத்தால் பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகள் உருவாகலாம். தானாக முடிவெடுக்க முடியாமல் தத்தளிப்பர். இதுபோன்ற காலங்களில் பிள்ளைகளை தீவிரமாக கவனித்துக் கொள்வது நல்லது. பூர்வீக சொத்துக்களை வைத்துக் கொள்வதா அல்லது விற்றுவிடுவதா என்ற எண்ணம் மேலோங்கும்.

**சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!**

ஒக்டோபர் 31 ஆம் திகதி தனுசு இராசியில் சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும் 6 க்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் 8 இல் மறையும் பொழுது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்ற அமைப்பு உருவாகும். அந்த நிகழ்வு ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் நிகழவிருக்கிறது. எனவே, எதிர்பாராத விதத்தில் தன வரவு வந்து சேரும். இல்லத்தில் உள்ளவர்களின் ஆசைகளையும் பூர்த்தி செய்வீர்கள். ஆடை, ஆபரண சேரக்கை உண்டு.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

மீண்டும் நவம்பர் 3 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் வந்து சேருகிறார். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும் என்றாலும் குடும்பப் பிரச்சினைகளும் சில சமயத்தில் தலைதூக்கலாம். எனவே, எதையும் யோசித்துப் பேசுவது நல்லது.

இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு உங்களுக்கு முன்னேற்றத்தை வரவழைத்துக் கொடுக்கும். சூரசம்காரத்தன்று விரதமிருந்து வழிபாடு செய்வது நல்லது.

## நீங்கள் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் நிறைவேறி மகிழ்ச்சியை அடைவீர்கள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் 14 இடங்களில் இரசாயன ஆயுத சோதனை பூர்த்தி

சிரியாவில் 14 இடங்களில் இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சோதனையை நடத்தியிருப்பதாக இரசாயன ஆயுதத் தடுப்பு அமைப்பு (ஓபிசிடபிள்யூ) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நெதர்லாந்தின் தி ஹேக் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு தெரிவித்ததாவது:

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக 20இற்கும் மேற்பட்ட இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 14 இடங்களில் எங்கள் குழுவினர் நேரில் சென்று, சோதனைகளை நடத்தினர். சிரியாவில் மொத்தமுள்ள இரசாயன ஆயுதங்களில் சுமார் 50 சதவீத அளவுக்கு சோதனைகளை நடத்தி முடித்துள்ளோம். மொத்த ஆயுதங்களும் அடுத்த ஆண்டின் நடுப் பகுதிக்குள் அழிக்கப்பட வேண்டியுள் ளது என்று ஓபிசிடபிள்யூ தெரிவித்துள்ளது.

எனினும், மேற்கண்ட 14 இடங்களிலும் இரசாயன ஆயுதங்கள் இருந்தனவா என் பது குறித்து தகவல் இல்லை.ஓபிசிடபிள்யூ அமைப்புக்கே உலக அமைதிக்கான நோபல் பரிசு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, சிரியாவிலுள்ள இரசாயன ஆயுதங்களை ஒழிக்க ஐ.நா. எடுத்துவரும் உறுதியான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பாராட்டு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடன் வரம்பு மசோதா நிறைவேற்றப்பட்டு, அரசுத் துறை முடக்கம் முடிவுக்கு வந்த பின்பு, முதல் முறையாக அந்நாட்டுக்கு வருகை தந்திருந்த இத்தாலிய பிரதமர் என்ரிகோ லெட்டாவை வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து பேசினார்.

சந்திப்புக்குப் பின், இரு தலைவர்களும் செய்தியாளர்களிடையே உரையாற்றினர்.

அங்கு ஒபாமா கூறுகையில்,

சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற ஐ.நா. தீர்மானத்தை மட்டுமல்ல, அதனைத் தொடர்ந்து அது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் உறுதியான நடவடிக்கைகளையும் நான் மனதார பாராட்டுகிறேன்.

சிரியாவில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதில் இத்தாலி முக்கியப் பங்கு வகித்து வருகிறது. சிரியாவில் நிகழ்ந்து வரும் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், மக்கள் துயர் நீங்கி தங்கள் வீடுகளுக்குத் திரும்பும் வகையிலான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவும் இத்தாலியின் ஒத்துழைப்பை அமெரிக்கா விரும்புகிறது.


லிபியாவைப் பொறுத்தவரை, அந்நாட்டு அரசின் கரங்களை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை நட்பு நாடுகளுடன் இணைந்து மேற்கொள்வது குறித்து நானும், பிரதமர் லெட்டாவும் விவாதித்தோம்.

லிபிய மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது. அவர்களுடைய இப்போதைய தேவையெல்லாம் அவர்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிக்கவல்ல, அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய, அனைத்து தரப்பாரையும் உள்ளடக்கிய ஒரு வலிமையான அரசாங்கம் தான் என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார்.

## ஐ.நா.பாதுகாப்பு சபையில் உறுப்பினர் பதவியை ஏற்க சவுதி அரேபியா மறுப்பு

ஐ.நா., பாதுகாப்பு சபையில், தற்காலிக உறுப்பினர் பதவியை ஏற்க, சவுதி அரேபியா மறுத்துவிட்டது. ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில், மொத்தமுள்ள, 15 இடங்களில், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா, பிரிட்டன் ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பு நாடுகளாகவும், மீதமுள்ள, 10 இடங்களில், மற்ற நாடுகள், சுழற்சி முறையில், தற்காலிக உறுப்பினராக, இரண்டு ஆண்டுகள் அங்கம் வகித்து வருகின்றன. இந்த ஆண்டு, சிலி, சாத், லிதுவேனியா, நைஜீரியா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் தற்காலிக உறுப்பினராவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.சவுதி அரேபியாவுக்கு முதன் முறையாக, ஐ.நா.,பாதுகாப்பு சபையில், உறுப்பினராவதற்கு, தற்போது வாய்ப்பு தரப்பட்டது. ஆனால், பல விடயங்களில், பாதுகாப்பு கவுன்சில் இரட்டை தன்மையை கடைப்பிடிப்பதால், இந்த கவுன்சிலில் உறுப்பு நாடாவதற்கு, சவுதி மறுப்பு தெரிவித்துள்ளது. "சிரியா நாட்டில், சொந்த மக்களையே, அந்நாட்டு அரசு கொன்று குவித்து வருகிறது. இஸ்ரேல் பாலஸ்தீன சண்டை, 65 ஆண்டுகளாக நீடிக்கிறது. இன்னும் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்ற நிலை காணப்படுகிறது. இந்த விடயங்களில், ஐ.நா.,வால், அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. எனவே, இந்த கவுன்சிலில், அங்கம் வகிப்பதை விரும்பவில்லை" என, சவுதி அரேபிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம் 172 பேர் பலி



மத்திய பிலிப்பைன்ஸில் நிலநடுக்கத்தில் இதுவரை 172 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

சுற்றுலாத் தீவான போஹோலை மையமாகக் கொண்டு இடம்பெற்ற நிலநடுக்கத்தில் அப்பகுதியில் மட்டுமே 160 பேர் உயிரிழந்ததாகவும், எஞ்சிய 12 பேர் ஏனைய மத்திய தீவுகளில் உயிரிழந்ததாகவும் மண்டல பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

போஹோல் தீவில் இதுவரை 22 பேர் காணாமல் போயுள்ளனர். அதில் 5 பேர் குழந்தைகள். நிலநடுக்கத்தை தொடர்ந்து 4ஆவது நாளாக அவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அவர்களை உயிருடன் மீட்பதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளது. இடிபாடுகளுக்கு இடையில் இன்னும் சிலர் சிக்கியிருப்பதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்" என்று போகோல் பொலிஸ் உயரதிகாரி டெனீஸ் அகஸ்டின் தெரிவித்தார்.

## தூதுவராகினார் கெனடியின் மகள்



அமெரிக்காவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜான் எப்.கென்னடியின் மகள் கரோலின் கென்னடியை(55) ஜப்பான் நாட்டின் தூதராக ஜனாதிபதி ஒபாமா நியமித்தார். இதற்கு ஒப்புதல் கிடைப்பதில் சில மாதங்களாக சிக்கல் நீடித்தது.

இந்நிலையில் செனட் சபையின் தீவிர ஆலோசனைக்கு பிறகு கரோலின் கென்னடி நியமனத்திற்கு ஒப்புதல் வழங்கியது. இதன் மூலம் ஜப்பானுக்கு செல்லும் முதல் பெண் தூதர் இவர் ஆவார்.

## ரஷ்யாவில் எரிமலை சீற்றம்

ரஷ்யாவின், வடக்கு பகுதியில், பெட்ரோ பாவலோவஸ்க் என்னுமிடத்தில், உள்ள, மிக உயரமான எரிமலை சீற்றமடைந்து, சாம்பலை உமிழ்ந்து கொண்டிருக்கிறது.

உலகின் மிகப் பெரிய, எரிமலைகளில், கிளுசெவஸ்கியும் ஒன்று. ரஷ்ய எரிமலையான கிளுசெவஸ்கி, 15,584 அடி உயரம் கொண்டது. எரிமலையில் இருந்து, ஏறக்குறைய, 10 கி.மீ., உயரத்திற்கு எழுந்த சாம்பல், சுற்றுப்புறத்தில், ஏறக்குறைய 200 கி.மீ., தூரத்திற்கு பரவியது.

எரிமலை வெடிக்க ஆரம்பித்ததையடுத்து, மாற்று வழியில் விமானங்களை இயக்கும்படி, விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

## லண்டனில் ஹிலாரிக்கு அபராதம்

அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், லண்டனில் தவறான இடத்தில் காரை நிறுத்திய குற்றத்துக்காக ரூ.22,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனின் மனைவியும், அந்நாட்டின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சருமான ஹிலாரி கிளின்டனுக்கு லண்டனைச் சேர்ந்த அமைப்பு ஒன்று சர்வதேச தூதரக உறவு விருதை அறிவித்திருந்தது. இதை பெறுவதற்காக ஹிலாரி லண்டன் சென்றிருந்தார்.

கிழக்கு லண்டனில் உள்ள சத்தாம் ஹவுசில் விருது வழங்கும் விழா நடந்தது. ஹில்லரி தனது மெட்டாலிக் வண்ணம் கொண்ட மெர்சிடிஸ் காரை, அரங்கத்துக்கு வெளியே வீதியில் நிறுத்தி விட்டு நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டார். அந்த வீதியில் காரை நிறுத்துவதற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.325 கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால், ஹிலாரியுடன் வந்த யாரும் இந்தக் கட்டணத்தைச் செலுத்தவில்லை என்று தெரிகிறது. அங்கு போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த காவலர் ஒருவர், இதை கவனித்துவிட்டார். விருது வாங்கிய பின், வெளியே வந்த ஹிலாரியிடம் விபரத்தை தெரிவித்து, ரூ22,000 அபராதம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதற்குள் அவரது பாதுகாப்புக்கு வந்திருந்த வீரர்கள், போக்குவரத்து பொலிஸாரிடம் ஆக்ரோஷமாக விவாதத்தில் ஈடுபட்டனர். ஆனால், போக்குவரத்து பொலிஸார் எதற்கும் மசிந்து கொடுக்கவில்லை. அதற்குள் பத்திரிகை புகைப்பட நிபுணர் ஒருவர் இந்த வாக்குவாதத்தை படம் எடுத்துவிட்டார். பிரச்சினை பெரிதாவதை உணர்ந்த ஹிலாரி, அபராதத்தை செலுத்துவதாகக் கூறி நோட்டீசை பெற்று கொண்டு காரில் ஏறி சென்று விட்டார்.




இது குறித்து வெஸ்ட்மினிஸ்டர் நகர சபையின் உறுப்பினரான டேனியல் அஸ்டைர் கூறுகையில்,

ஹிலாரியின் கார் 45 நிமிடங்கள் அந்த வீதியில் நின்றிருந்தது. அதற்குரிய அபராதக் கட்டணமே இது.

விவிஐபிகள் முதல் பொதுமக்கள் வரை எல்லோருக்கும் விதி முறை ஒன்றுதான்" என்றார். இந்த அபராதத் தொகையை 14 நாட்களுக்குள் ஹிலாரி கட்டினால், அபராதத் தொகை பாதியாக குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண பந்தத்திற்கு தயாராகும் பாவனா



நடிச்சது போதும் இந்த ஆண்டு இறுதியில் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவினை எடுத்துள்ளாராம் பாவனா.

கேரளத்து வரவான இவர் தமிழில் சித்திரம் பேசுதடி, தீபாவளி, அசல் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

தற்போது தமிழ், தெலுங்கு என அவர் கைவசம் படங்களே இல்லாததால் திருமண பந்தத்தை தொடரப் போகிறாராம்.

இதுகுறித்து அவர் கூறுகையில், திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்திருப்பது உண்மைதான். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்.

திருமணம் என்பது வாழ்க்கையில் முக்கிய நிகழ்வு. அதனால் தான் அதை நிதானமாக அறிவிக்கிறேன்.

மேலும் இந்திப் படங்களில் நான் நடித்துக் கொண்டிருந்தபோது, அங்கெல்லாம் உங்களுக்கு எப்போது திருமணம் என்று யாரும் கேட்டது இல்லை ஏனெனில் என் வயதுள்ள பலர் அங்கு முன்னணி நடிகைகளாக உள்ளனர்.

30 வயதுள்ள நடிகைகள் கூட அங்கு திருமணம் பற்றி சிந்திப்பது இல்லை. ஆனால் இதையெல்லாம் இங்கு எதிர்பார்க்க முடியாது என்றும் என்னைப் பொறுத்தவரை இந்த 27 வயது என்பது திருமணம் செய்ய சரியான நேரம் எனவும் கூறியுள்ளார்.



நடிகர் : மிர்ச்சி சிவா, நடிகை : ப்ரியா ஆனந்த்
இயக்குநர் :கிருத்திகா உதயநிதி

படம்: வணக்கம் சென்னை

# யன்னல் ஓரம் படத்தில் பூர்ணா



முனியாண்டி, விலங்கியல் 3ம் ஆண்டு, வித்தகன் என பல படங்களில் நடித்திருப்பவர் பூர்ணா.

இவர் தற்போது கரு பழனியப்பன் இயக்கும் ஜன்னல் ஓரம் படத்தில் பார்த்தீபனுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், வழக்கமாக, யாரிடமும் பதிலுக்கு பதில் பேச மாட்டேன். ஆனால், பார்த்தீபனுடன் நடிக்கத் தொடங்கிய பிறகு பக்குவமாக பேசுவது எப்படி என்பதை புரிந்து கொண்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் எனது கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக சொல்ல கற்றிருக்கிறேன். வாழ்க்கையில் முக்கியமான சில விடயங்களையும் எனக்கு புரிய வைத்திருக்கிறார்.

மேலும் அவரது தொழில்நுட்ப அறிவு எனக்கு பிடிக்கும் என்றும் ஏற்கனவே வித்தகன் படத்தில் பார்தீபனுடன் நடித்திருக்கிறேன். அப்போதைய எனது பேச்சுக்கும், இப்போதைய பேச்சிலும் எவ்வளவு மாற்றம் தெரிகிறது என்பதை அவர் குறிப்பிட்டு பாராட்டுவார் எனவும் கூறியுள்ளார். தற்போது தகராறு, படம் பேசும் போன்ற படங்களிலும் நடித்து வருகிறேன் என்று மகிழ்ச்சியோடு கூறுகிறார் பூர்ணா.

# சிம்புவின் அக்காவாக ரம்பா



சிம்புவின் அக்காவாக மீண்டும் தனது நடிப்பினை தொடரப் போகிறாராம் ரம்பா.

ஒரு காலத்தில் கனவுக்கன்னியாக ரசிகர்களின் தூக்கத்தைக் கெடுத்தவர் தொடையழகி ரம்பா.

பின்னர் தொழிலதிபர் ஒருவரை மணந்து வெளிநாட்டில் செட்டில் ஆனார். தற்போது இரண்டரை வயதில் குழந்தை உள்ள ரம்பா தனது அடுத்த இன்னிங்ஸ்க்கு ரெடியாகி விட்டாராம்.

சிம்புவின் அக்காவாக தமிழ் படம் மூலம் மீண்டும் வர இருக்கிறாராம். இனி அக்கா, அண்ணி போன்ற நல்லா கதாபாத்திரங்கள் மட்டுமே இவரது சிறந்த தெரிவாக இருக்குமாம்.

# அஜித் 1300 கி.மீ விழிப்புணர்வு பயணம்

போக்குவரத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக புனேயிலிருந்து சென்னைக்கு ரேஸ் பைக்கில் வந்தார் அஜித்.


கடந்த 2 மாதத்துக்கு முன்பு சென்னையிலிருந்து பெங்களூருக்கு பைக்கில் சென்று வந்த அஜித் இம்முறை புனேயிலிருந்து சென்னைக்குப் பைக்கில் வந்தார்.

‘ஆரம்பம்’ படத்தின் வேலைகள் முடிந்தவுடன் மும்பையிலிருந்து புனேவுக்கு ரேஸ் பைக்கில் வந்து ‘வீரம்’ பட ஷூட்டிங்கில் பங்கேற்றார். 20 நாட்கள் ஷூட்டிங் முடித்தவர் புனேயிலிருந்து சென்னைக்கு பைக்கில் வர முடிவு செய்தார்.

19 மணி நேரத்தில் 1300 கி.மீற்றர் பைக்கில் பயணம் செய்து சென்னை வந்து சேர்ந்தார். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அவரே செய்துகொண்டார். சாலை பயண பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவே இந்த பயணத்தை அஜித் மேற்கொண்டார். இந்த பயணத்தின்போது ஹைவே சாலைகளில் உள்ள உணவகங்களில் நிறுத்தி கிராமப்புற உணவை ருசி பார்த்தார்.

இதுபற்றி அஜித் கூறும்போது, ‘சாலை பயணம் தியானம் போன்றது. எதிர்கால திட்டங்கள் வகுக்கவும் இந்த பயணம் உதவியது என்றார்.

# பாடல் காட்சிகளுக்கு தயாராகிறது ஜில்லா



மோகன்லால் சம்பந்தப்பட்ட காட்சிகள் மற்றும் பாடல் காட்சிகளுடன் ஜில்லா படப்பிடிப்பு முடிவுக்கு வருகிறது.

தலைவா திரைப்படத்துக்குப் பிறகு விஜய் நடித்து வரும் படம் ஜில்லா. மதுரையை கதை களமாக கொண்டு எடுக்கப்பட்டு வரும் இப்படத்தில் விஜய் பொலிஸாக நடிக்கிறார். அவருக்கு ஜோடிதான் காஜல் அகர்வால். இவர்களுடன், மலையாள சுப்பர் ஸ்டார் மோகன் லால், பூர்ணிமா பாக்யராஜ், பரோட்டா சூரி மற்றும் பலர் நடிக்கின்றனர். நேசன் இயக்கும் இப்படத்தை ஆர்.சௌத்திரி பிரமாண்டமாக தயாரிக்கிறார். டி.இமான் இசையமைக்கிறார்.

ஜில்லாவின் டாக்கி போர்ஷன் ஏறக்குறைய முடிந்துவிட்டதாம். இப்போதைக்கு மோகன்லால் சம்பந்தப்பட்ட 5 நாள் ஷூட்டிங் மட்டுமே பாக்கியாம். இதையும் அடுத்த மாத இறுதியில் படமாக்குகிறார்கள். அதோடு மீதமிருப்பவை என்று பார்த்தால் அது பாடல் காட்சிகள்.

இம்மாத இறுதியில் பாடல் காட்சிகள் எடுக்கப்பட உள்ளன. வெளிநாடுகளில் சில பாடல்கள் படமாக்கப்பட உள்ளன. சில ஹைதராபாத்தில். அதற்காக அரங்குகள் அமைக்கவிருக்கிறார்கள். டி.இமானின் இசையில் பாடல்கள் சிறப்பாக வந்துள்ளதாக படக்குழு தெரிவிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறை அபிவிருத்தி திட்டமிடலில் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படும்

## சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம்

(பூந்தோட்டம்)

**வடமாகாணத்தின் சுகாதாரத்துறை அபிவிருத்திக்கான திட்டமிடலின்போது பொதுமக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படுமென்று வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியா கோவில்குஞ்சுக்குளம் பகுதியில் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டபோதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா மாவட்டத்தின் வடக்கு பிரதேசம் மற்றும் பாலமோட்டை பகுதிகள் கடந்தகால யுத்தத்தினால் அதிகளவில் பாதிக்கப்பட்டன. அத்துடன் சுகாதாரம் உட்பட ஏனைய அடிப்படைத்தேவைகள் உடனடியாக பூர்த்திசெய்ய வேண்டியுள்ளன.

எனவே, மக்களுக்கான சுகாதார அபிவிருத்தி தொடர்பான திட்டமிடலானது அவசர, இடைக்கால மற்றும் நீண்டகால நோக்கில் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படும். இதன்போது பொதுமக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.


இதன் போது அப் பகுதி மக்கள் அமைச்சரிடம் தமது பிரதேச சுகாதார நிலைமைகள் தொடர்பில் எடுத்துக்கூறும்போது,

தங்களுடைய பிரதேசத்தில் வைத்தியசாலை வசதிகள் இல்லையெனவும் இதற்காக 25 கி.மீற்கு அப்பாலுள்ள ஓமந்தை வைத்தியசாலைக்கே செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர். இவ்வாறான நிலையில் தமக்கு போக்குவரத்து வசதிகள் குறைவாக காணப்படுவதால் தங்கள் பகுதியில் வைத்தியசாலை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.




இதேவேளை, தமது பிரதேசத்திலுள்ள குஞ்சுக்குளம் பாடசாலை அதிபர் இல்லாது பலகாலமாக இயங்குவதாகவும் உடனடியாக அதிபர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டதுடன் நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவியபோது தங்கள் பகுதியில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினால் நடத்தப்பட்ட நடமாடும் வைத்திய சேவையில் தொண்டர்களாக பலவருடங்கள் பணியாற்றிய இளைஞர், யுவதிகள் தற்போது வேலைவாய்பின்றி இருப்பதாகவும் எதிர்காலத்தில் சுகாதாரத்துறையில் நியமனங்கள் வழங்கப்படும்போது தகுதியானவர்களுககே முன்னுரிமை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

இதன்போது கருத்துதெரிவித்த சுகாதார அமைச்சர், இதுதொடர்பில் சம்பந் தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாகவும் இப்பகுதியில் வைத்தியசாலைக்கான தேவையுள்ளதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார். (ம-266)




# பூங்காவிலுள்ள விளையாட்டு உபகரணங்கள் திருத்தப்படவில்லை



(குருமன்காடு)

வவுனியா நகர சபைக்கு சொந்த மான சிறுவர் பூங்காவில் உள்ள விளையாட்டு சாதனங்கள் உடைந்த நிலையிலும் தகடுகள் வெடித்த நிலையிலும் காணப்படுகின்றன.

இதனால் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற சிறுவர்கள் காயங்களுக்கு உள்ளாகின்றனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரசபை பூங்காவில் பல விளையாட்டு சாதனங்கள் உடைந்த நிலையில் காணப்படுவதோடு, உலங்கு வானூர்தியின் மேற்பகுதி உடைந்தும் உள்ளது.

வானூர்தியின் மேற்பகுதியி லிருந்து சறுக்கி வரும் பகுதியில் உள்ள தகடுகள் வெடித்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் அதில் விளையாடுகின்ற சிறுவர்களுக்கு காயங்கள் ஏற்படுகின்றன

மேலும் இப்பூங்காவில் உள்ள பல விளையாட்டு பொருட்கள் திருத்தப்படாது காணபபடுகின்றது.

இதேவேளை பூங்காவை புனரமைப்பு செய்வதற்கு நகரசபை நிதி ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

# வவுனியா நவீன சந்தையில் தண்ணீருக்கு தட்டுப்பாடு

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள நவீன சந்தையில் தண்ணீர் வசதி செய்து தரப்படவில்லை என வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நவீன சந்தைப்பகுதியில்100 இற்கு மேற்பட்ட கடைகளில் பல தொழிலாளிகள் பணிபுரிகின்றனர். இவர்கள அனைவரும் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது பற்றி வர்த்தகர் ஒருவர் குறிப்பிடுகையில்,

கடும் வரட்சியான காலத்தில் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் குடிநீரைப் பெறுவதில் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றோம்.

மலசலகூட தேவைக்கும் தண்ணீர் இன்மையால் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது என குறிப்பிட்டார்.

மேலும் மற்றொருவர் கூறுகையில்,

மலசல கூட கதவிற்கு பூட்டு இல்லை. இதன் தண்ணீர் பைப்புக்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. நகர சபையினரால் இதற்கு தண்ணீர் வழங்கப்படுவதும் குறைவு, மலசல கூடம் நகர சபையினால் கிரமமாக சுத்தம் செய்யப்படுவதுமில்லை. இதனால் பொருட்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் எனவும் கூறினார்.

இது குறித்து நகர சபையினருக்கு இது வரையில் பல தடவைகள் எடுத்து கூறிய போதிலும் எதுவித நடவடிக்கையும் இது வரையில் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று சுகாதாரப் பிரிவினரிடமும் பலதடவைகள் எடுத்து கூறியுள்ளோம். அவர்களும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ம-250)

# புனர்வாழ்வு வேலைத் திட்டத்தில் தொண்டர்களுக்கு செயலமர்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சமூக சேவைகள் அமைசசின் மாற்றுவலுவுள்ளோர் புனர்வாழ்வு வேலைத்திட்டத்தில் ஈடுபடும் தொண்டர்களுக்கு 4 நாட்கள் செயற்றிறன் விருத்திச் செயலமர்வு உதயநகர் சோலைவனம் விருந்தினர் விடுதியில் கடந்த 14 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நடைபெற்றது.


இதில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த 20 தொண்டர்கள் கலந்து கொண்டனர். கன்டிகாவ் இன்ர நஷனல் நிறுவனம் அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து இவ வேலைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

மாற்றுவலுவுள்ளோரின் புனர்வாழ்வு தொடர்பான வேலைத்திட்டங்கள் இத் தொண டர்கள் மூலமாக பிரதேச செயலர்களின் அனுசரணையுடன் கிராம மட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கன்டிகாவ் நிறுவனம் ஏற்கனவே 11 தொண்டர்களை பயிற்றுவித்து மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன் புனர்வாழ்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அது போல தற்போதைய தொண்டர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன. பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர்கள் இவர்களுடன் ஒத்திசைந்து இவ் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க உள்ளனர்.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்துக்கு இவ் வேலைத் திட்டம் பாரிய நன்மை பயக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-254)



பூநகரி பிரதேச செயலர் பிரிவில் (நெனசல) 733 ஆவது அறிவகம் அண்மையில் நெனசல இணைப்பாளர் தமிழழகனால் திறந்துவைக்கப்பட்ட போது....
(படம்:- பூநகரிசெய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாட்டில் எதிர்க்கட்சி சிறப்புக்குழுவை இறக்க அரசாங்கம் பகீரதப்பிரயத்தனம்

(கொழும்பு)

**பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இலங்கையின் சார்பில் விசேட குழுவில் கலந்து கொள்வது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி இன்னமும் கருத்துக்கூறவில்லை என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக ஐக்கியதேசிய கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் அரசாங்கம் தொடர்பு கொண்டு பேசியதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு எதிர்ப்பு இல்லை என்றும் ஆனாலும் மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து கட்சியின் செயற்குழு கூடி முடிவு செய்யும் என்றும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, அமைச்சர் நிமால்சிறிபால டி சில்வாவிடம் கூறியதாக உள்ளக தகவல்கள் கூறுகின்றன.

ஜே.வி.பியியும் பதில் எதுவும் கூறவில்லை என அரசாங்க தகவல்கள் கூறுகின்றன. பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை அரசியலாக பார்க்க வேண்டாம் என்றும் இலங்கைக்கு பெருமை சேர்க்கும் நிகழ்வாக கருதுமாறும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முற்பகல் அரச இலத்திரனியல் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புடனும் இது தொடர்பாக பேசியதாகவும் அவர்களிடம் இருந்தும் பதில் கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக கட்சி மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாகவும் கலந்துகொள்வதில்லை என்ற கனடா பிரதமரின் முடிவுக்கு பாராட்டையும் ஜனநாயகக் கட்சி தெரிவித்திருந்தது.

எதிர்க்கட்சிகள் அடங்கிய சிறப்பு குழு ஒன்றை பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்குகொள்ள வைப்பதற்கு அரசாங்கம் கடும் முயற்சி எடுத்து வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.(அ-2)




Nation Popular & Tours யாழ். பிராந்திய அலுவலகத்தில் வாடிக்கையாளர்களின் winner ஆக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இதில் கிளிநொச்சியைச் சேர்ந்த சுபாஸ் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மொகமட்ஹறிஸ், செல்லையா, யசோதினி, சுகந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முகாமையாளர் நாகேந்திரசீலன் மற்றும் உதவி முகாமையாளர் ஷைலந்தி ஆகியோர் பரிசினை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# சிறுபான்மை கட்சிகளுக்கும் பிரதியமைச்சுப் பதவிகள்

## வழங்குவது உறுதி என்கிறார் அமைச்சர் பஷில்

நான்கு கட்டங்களாக மேலும் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதியமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இரண்டாம் அல்லது நான்காம் கட்டத்தில் மூன்று சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு பிரதியமைச்சுப் பதவிகள் கிடைக்குமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான பிரபா கணேசன், பி. திகாம்பரம் உள்ளிட்டவர்களுக்கு பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்படுமா? என்பது குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

முக்கிய அமைச்சுக்களுக்கு பிரதியமைச்சர்கள் இன்மையினால் அவற்றுக்கு பிரதியமைச்சர்களை நியமிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. அந்த வகையில் நான்கு வகைப்படுத்தல்களின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குறிப்பாக முன்னர் மாகாண சபைகளில் அமைச்சுப் பதவிகளை வகித்தோர், கடந்த 2010 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கூடிய விருப்பு வாக்குகளை பெற்றோர், இரண்டாவது அதி கூடிய விருப்பு வாக்குகளை பெற்றோர் மற்றும் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகள் போன்ற அடிப்படையிலேயே வகைப்படுத்தல்கள் அமைந்துள்ளன.

முதற்கட்டமாக ஒரு வகைப்படுத்தலின் கீழ் பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் முன்னர் மாகாண சபைகளில் அமைச்சுப் பதவிகளை வகித்தோர் மற்றும் விருப்பு வாக்குகள் போன்ற விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டன.

அடுத்ததாக இரண்டாவது கட்டத்திலும் சிலருக்கு பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. இந்த இரண்டாவது அல்லது மூன்றாவது கட்ட பிரதியமைச்சுப் பதவி வழங்கும் செயற்பாட்டின் போது சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் பதவிகள் வழங்கப்படுவது நிச்சயமாக நடைபெறும்.

குறிப்பாக சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இவ்வாறு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்பதனை தெரிவிக்கின்றேன் என்றார். (அ-2)

# பாலியல் குற்றத்திற்கு தண்டனை காலம் நீடிப்பு

(கொழும்பு)

பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபடும் கைதிகளின் தண்டனைக் காலம் மேலும் நீடிக்கப்படும் என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய சக கைதிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தும் கைதிகளின் தண்டனைக் காலம் மேலும் அதிகரிக்கப்படும்.

பாலியல் ரீதியான குற்றச் செயல்களை முற்றுமுழுதாக சிறைச்சாலைகளில் தடுக்க முடியாது.

பாதிக்கப்படும் கைதிகள் இது தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மாநாட்டைப் புறக்கணிப்பது பிரச்சினைக்கு தீர்வல்ல!

## நியூசிலாந்து பிரதமர் தெரிவிப்பு

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வினை நிராகரிப்பது பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை நிலைமைகளைக் காரணம் காட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமர்வுகளில் பங்கேற்பதனை தவிர்ப்பது நியாயமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு ஓர் பொது நிகழ்வு. ஒரு நாட்டின் மனித உரிமை விவகாரம் அல்லது வேறும் விடயங்களுக்காக அமர்வுகள் அல்லது நிகழ்வுகளில் பங்கேற்காமல் விடுவது பொருத்தமற்றது. இவ்வாறு கருதினால் கிழக்கு ஆசிய மாநாடுகள், ஒபேக் மாநாடுகள் பலவற்றில் பல நாடுகள் பங்கேற்க முடியாது.

இவ் அமர்வுகளில் பங்கேற்று மனித உரிமை நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்ப முடியும் எனவும், மாறாக அமர்வுகளை புறக்கணிப்பது பொருத்தமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

O/L / A/L மாணவர்கள் மற்றும்
HNDE / HNDA/ HND Edexcel / CIMA / CIM / ACCA மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு

Teesside University
INSPIRING SUCCESS

STUDY IN UK

Feb. 2014 Intake

Undergraduate

Business and Accounting
- Business Management (Final year Top-Up)
- Internatonal Managemnet (Final year Top-Up)

Entry Requirements
HNDA / CIMA / CIM / ACCA / CIPD
தகுதி உடையோர் இறுதியாண்டுக்கு அனுமதிக்கப்படுவர்.

Engineering
- Mechanical Engineering B.Eng (Tech)
- Electrical and Electronic Engineering B.Eng (Tech)

Entry Requirements
HND or Level 5 qualification, City & Guilds, Ad.Dip & Edexcel HND தகுதி உடையோர் இறுதியாண்டுக்கு அனுமதிக்கப்படுவர்.

Postgraduate / MSc

Business and Accounting
- Master of Business Administration (MBA)

Engineering
- Electronic and Communication
- Civil Engineering / Mechanical Engineering

O/L / A/L தகுதியோடு
International Foundations Year
(Business and Accounting / Engineering)
அனுமதிக்கப்படுவர்

எமது சேவை முற்றிலும்
இலவசமானது

(4313)

உங்கள் கல்வித்தகைமை சான்றிதழ்களுடன் நேரில் வரவும் அல்லது பின்வரும் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும் apssengineer@gmail.com

Contact: Prof.K.Chandirabose 077 386 7695

Official Representative Teesside University -UK

APSS INTERNATIONAL NETWORK (PVT) LTD
No: 35, Nelson Place, Colombo 06. | Tel: 011 2361587

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல் நாடுகளின் அத்துமீறலுக்கு மன்மோகன் பலவீனமே காரணம்

## நரேந்திர மோடி தெரிவிப்பு

(டில்லி)

**அயல் நாடுகள் அத்துமீறுவதற்கு பிரதமர் மன்மோகன் சிங்கின் பலவீனமே காரணம் என குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட அயல் நாடுகள் அத்து மீறுவதற்கு பிரதமர் மன்மோகன் சிங்கின் பலவீனமே காரணம் என அவர் கூறியுள்ளார்.

நரேந்திர மோடி ஒருநாள் பயணமாக நேற்றுமுன்தினம் சென்னைக்கு பயணித்தார்.

சென்னை விமான நிலையத்தில் தொண்டர்களை சந்தித்த அவர்,

அன்று மாலையில் சென்னை பல்கலைக்கழக மண்டபத்தில் பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான அருண்ஷோரி எழுதிய புத்தகத்தை வெளியிட்டார்.



அப்போது உரை நிகழ்த்திய நரேந்திர மோடி,

இந்திய ரூபாய் அறுவை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகிறது. நாட்டின் பொருளாதாரம் சவக்கிடங்கில் கிடக்கிறது. உலக நாடுகள் இடையே இந்தியா நன்மதிப்பை இழந்து வருகிறது. அயல் நாடுகளுடன் உள்ள பாராம்பரிய உறவும் தற்போது சீராக இல்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் வெளியுறவுக் கொள்கையே இதற்கு காரணம்.

எங்கு நமக்கு மிகுந்த கவனம் தேவையோ அங்கு அக்கறையின்றி செயற்படுகிறோம். எங்கு நமக்கு அக்கறை தேவையோ அங்கு நாம் பலவீனமாக இருக்கிறோம்.

துரதிர்ஷ்டவசமாக இதே கொள்கைதான் இன்று வரை நீடிக்கிறது. நமது பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டதாகவே வெளியுறவுக் கொள்கை இருக்க வேண்டும். அந்த வகையில் வாஜ்பாய்தான் முதல் முறையாக அத்தகைய கொள்கையைக் கடைபிடித்தார். அவர்தான் இந்தியாவுக்கு வலிமையையும், அமைதியையும் காட்டினார்.

தமிழக மீனவர்கள் பிரச்சினையில் தீர்வுகாண முடியாது மன்மோகன் சிங் அரசு தள்ளாடி வருகிறது என்றார். (2)



குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடந்த நகர அபிவிருத்தி தேசிய மாநாட்டிற்கு வருகை தந்திருந்த இந்தியாவிற்கான ஜப்பான் தூதுவரை மாநில முதல்வர் மோடி கைலாகு கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.

# வடகிழக்கு பருவ மழையினால் இம்முறை தமிழகம் பயன்பெறும்

## சென்னை வானிலை ஆய்வுமையம்

(சென்னை)

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

வடகிழக்கு பருவமழையினால் அதிகம் பயன்பெறுவது தமிழகம். ஒக்டோபர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான காலம் இந்திய தீபகற்பத்தில் வடகிழக்கு பருவ மழைக் காலம் என்று அழைக்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காலம் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களுக்கு 60 முதல் 70 சதவீத மழையையும், உள்மாவட்டங்களுக்கு 40 முதல் 50 சதவீத மழையையும் தருகிறது.

தென்மேற்கு பருவமழை இன்னமும் முடிவடையவில்லை. இன்னும் ஓரிரு நாட்களில் அது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து தமிழகத்தில் நாளை மறுதினம் முதல் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகிறது.

வடகிழக்கு பருவமழையை நம்பியே தமிழக விவசாயிகள் பயிர் செய்கின்றனர்.

எனவே, கடந்த ஆண்டுகளை காட்டிலும் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தமிழகத்துக்கு போதிய அளவு மழையை கொடுக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.(2)

# மலேசியாவிற்கான இந்.தூதுவர் நியமனம்

மலேசியாவுக்கான புதிய இந்திய தூதுவராக டி.எஸ். திருமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.



இந்திய வெளியுறவுப் பணி அதிகாரியும், தமிழருமான திருமூர்த்தி விரைவில் தனது புதிய பொறுப்பை ஏற்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்களை அவர் கவனித்து வருகிறார். இந்நிலையில், அவரை மலேசிய நாட்டுக்கான இந்திய தூதுவராக மத்திய அரசு நியமித்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த திருமூர்த்தி, 1985ஆம் ஆண்டு வெளியுறவுப் பணியில் இணைந்தார். காசா, வோஷிங்டன், கெய்ரோ, ஜகார்த்தா, ஜெனீவா ஆகிய உலக நாடுகளின் முக்கிய நகரங்களிலுள்ள இந்திய தூதரகங்களில் பணியாற்றியுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இவர் இலங்கை விவகாரங்களையும் கவனித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

பாரதச் செய்தி

# அமெரிக்க ஆயுத கப்பலில் இருந்தவர்கள் சிறையிலடைப்பு

(தூத்துக்குடி)

இந்திய கடல் பகுதிக்குள் அத்து மீறி நுழைந்ததாக சிறை பிடிக்கப்பட்ட அமெரிக்க கப்பலின் கப்டன், மாலுமிகள், பாதுகாப்பு வீரர்கள் உள்ளிட்ட 33 பேரை க்யூ பிரிவு பொலிஸார் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்தனர்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பாளையங் கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு தொடர்பாக க்யூ பிரிவு கண்காணிப்பாளர் தலைமையிலான அதிகாரிகள் கடந்த 16ஆம் திகதி கப்பலுக்குச் சென்று விசாரணையைத் தொடங்கினர்.

கப்பலில் உள்ள ஆயுதங்களுக்கான உரிமம்,ஆவணங்கள், கப்பல் எங்கெல்லாம் சென்றுள்ளது என்பதற்கான குறிப்பேடு, இந்திய கடல் எல்லைப் பகுதிக்குள் அனுமதியின்றி வந்தமைக்கான நோக்கம் ஆகியவை குறித்து அவர்கள் விசாரணைகளை நடத்தினர்.

இதற்கிடையே, கப்பலில் உள்ள ஆயுதங்களுக்கான ஆவணங்களின் நகல்கள் மட்டுமே இருந்த நிலையில், உண்மை ஆவணங்களைக் காண்பிக்குமாறு க்யூ பிரிவு அதிகாரிகள் கெடுவிதித்தனர். இருப்பினும், அட்வன் போர்ட் நிறுவனத்தின் இந்திய கிளை அலுவலக அதிகாரி சாக்கோ தாமஸ் உரிய பதில்களை வியாழக்கிழமை இரவுவரை கொடுக்கவில்லை. இதையடுத்து, கப்பலில் இருந்த ஆயுதங்களை க்யூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இந்நிலையில், கப்பலில் இருந்தவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது. அதிகாலையில் பொலிஸார் கப்பலுக்கு சென்று, கப்பலில் உள்ள 35 பேரையும் கைது செய்வதாக கப்பல் கப்டனிடம் தெரிவித்தனர். அதற்கு அவர்கள் மறுப்பு ஏதுவும் தெரிவிக்கவில்லை.

மேலும், கப்பலைப் பராமரிக்க சிலர் வேண்டும் என கப்பல் கப்டன் கேட்டுக்கொண்டதை யடுத்து, கப்டன் உட்பட 8 மாலுமி களையும், 25 பாதுகாப்பு வீரர்களையும் பொலிஸார் கைது செய்தனர். பராமரிப்புப் பணிக்காக மட்டும் இரண்டு மாலுமிகளை கப்பலில் இருக்க அனுமதித்தனர்.

இதற்கிடையே, கைதான 33 பேருக்கும் பிணை கேட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நாளை திங்கட்கிழமை மனுத்தாக்கல் செய்ய உள்ளதாக அவர்களுக்கு ஆதரவாக வாதாடவுள்ள வழக்குரைஞர்கள் தெரிவித்தனர். (2)

# தமிழை கட்டாய பாடமாக்க சட்டம் கொண்டு வரவேண்டும்

## பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

(சென்னை)

தமிழை கட்டாய பாடமாக்க சட்டம் கொண்டு வர வேண்டும் என பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

கேரள அரச பணிகளில் சேருவதற்கு அதற்கு தகுதியான வகுப்புகளில் மலையாளத்தை ஒரு பாடமாக படித்திருக்க வேண்டும் என்று அம்மாநில அரசு அறிவித்திருக்கிறது.


ஆனால், தமிழகத்தின் நிலையோ இதற்கு நேர் எதிராக உள்ளது. தமிழைப் படிக்காமலேயே பட்டம் பெற முடியும். அரச பணிகளில் சேர முடியும் என்ற நிலைதான் தமிழகத்தில் உள்ளது.

பட்டப் படிப்பு வரை தமிழைக் கட்டாய பாடமாக்க வேண்டும். தமிழை பயிற்றுமொழியாக்க வேண்டும் என்ற கோரிக்கை 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால், தமிழின்பெயரைக் கூறி ஆட்சிக்கு வந்த கட்சிகளால் இந்த அடிப்படை கோரிக்கைகளைக் கூட நிறைவேற்ற முடியவில்லை.

இதேபோல் தமிழக பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் சட்டம் கொண்டுவர கோரி கடந்த 1998 ஆம் ஆண்டு 102 தமிழறிஞர்கள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சாகும்வரை உண்ணாநிலை இருந்தனர். அவர்களை சமாதானப்படுத்திய கலைஞர் அரசு, அந்தக் கோரிக்கைகளை செயற்படுத்துவது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க நீதிபதி மோகன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

அக்குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவை செயற்படுத்தப்படாத நிலையில், 1999 ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்புவரை மட்டும் தமிழ் வழிக் கல்வியை கட்டாயமாக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்கு தனியார் பாடசாலைகள் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தடை பெறப்பட்டது. அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ள மேல் முறையீட்டை விரைந்து முடித்து, தடையை நீக்கி தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப் படுத்ததமிழ் நாட்டை ஆட்சி செய்தவர்கள் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.



தமிழைப் பயிற்று மொழியாக்குவதன் மூலமாக மட்டுமே தமிழை வளர்த்தெடுக்க முடியும். மலையாளத்தை வளர்ப்பதில் கேரள அரசு காட்டும் அக்கறையை, தமிழை வளர்ப்பதில் தமிழக அரசும் காட்ட வேண்டும்.

தமிழ் தொடர்பாக அரசாணைகள் பிறப்பிக்கப்படுவதால்தான் அவற்றை தனியார் பாடசாலைகள் மதிப்பதில்லை. சட்டம் கொண்டு வரப்படுமாயின் அதை அப்பள்ளிகள் மீற முடியாது. எனவே, தமிழை பயிற்று மொழி மற்றும் கட்டாய பாடமாக்குவதற்கான சட்ட மசோதாவை எதிர் வரும் 23 ஆம் திகதி தொடங்க விருக்கும் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது.

–ஜேம்ஸ் க்ளார்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்

வடக்கு மாகாண அரசுக்கு ஏகப்பட்ட பணிகள் உண்டு. எனினும் அவர்கள் அந்தப் பணியை உணர்ந்து கொள்வதை விட, விழாக்களில் பரிவாரங்களுடன் கலந்து கொள்வதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

பாலுக்காக அழும் குழந்தையும், பால் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் தாயும் எங்கள் மண்ணில், கண்ணீர் விட; நாங்கள் நல்லம், நல்லம், பழரசம் நல்லம் என்று சொல்லும் அளவில்தான் இருக்கிறோம்.

எதுவாயினும் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் பரிவாரங்களுடன் விழாக்களில் கலந்து கொள்வதை தவிர்ப்பதும், அவரவர் தத்தம் கடமைகளைச் செய்யப் பணிப்பதும் கட்டாயமானதாகும்.

இது தொடர்பில் முதலமைச்சர் கவனம் செலுத்துவார் என நம்புகிறோம்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்களிப்பு என்பதற்குள் பல்வேறு எதிர்பார்ப்புகள் உண்டு. எனவே அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

எனினும் வடக்கு மாகாண சபையின் ஆட்சி கிடைத்ததைப் பயன்படுத்தி புகழ் பெறும் நோக்கில் விழாக்களில் பரிவாரங்களுடன் கலந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேரத்தை வீண் விரயம் செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு வந்தால் விழா, மற்றும் படி அறிக்கை விடுதல் என்றவாறான நிர்வாகத்தைச் செய்வதற்கு தமிழ் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். நாமும் துணைபோக முடியாது.

எனவே வடக்கு மாகாண அரசு செய்யும் பணிகளையும் அதன் உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் விழாக்கள், அதில் அவர்கள் செலவிடும் நேரம் என்பன தொடர்பிலும் பொதுமக்கள் கவனம் செலுத்துவர் என்பதை எவரும் மறந்து விடாதீர்கள்.

அரசு, அரசியல் என்றால் இப்படியான கூத்துக்கள் இருக்கும் என்ற நியாயப்பாடு போரினால் பாதிக்கப்பட்டு அத்தனையும் இழந்த வடபகுதிக்குப் பொருத்துடையது அல்ல.

விழாக்களுக்கும்–மாலை மரியாதைகளுக்கும்–அனைத்து உறுப்பினர்களும் கூட்டாகக் கலந்து கொள்வதற்கும் இது நேரமல்ல.

இப்போது வடக்கு மாகாண அரசின் கடமை முழுவதும் போரினால் சிதைந்துபோன தமிழர் வாழ்வைக் கட்டியெழுப்புவதாகும்.

அதிலும் குறிப்பாக வன்னிப் பகுதியில் வாழ்விடம் இன்றி, நாளாந்த சீவனோபாயத்திற்கு வழியின்றி ஏங்கும் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இதற்காக வடக்கு மாகாண முதல்வரும் உறுப்பினர்களும் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று அந்த பணியை நிறைவேற்றுவது அவசியம்.

இதற்காக எங்கள் புலம்பெயர் உறவுகளின் உதவிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளும் அதன் மூலம் வீடமைப்புத் திட்டங்களும் அமுலாக்கப்பட வேண்டும்.

இதற்காகக் கர்மவீரர் காமராஜர் போல நீவிர் உழைக்க வேண்டும்.

இதைவிடுத்து ஆளையாள் மாறி மாறிப் புகழ்ந்து கொட்டி புளுகுப்பட்டால் வாக்களித்த தமிழ் மக்கள் சும்மா இருப்பார்கள் என்று கருதி விடாதீர்கள்.

நிச்சயம் அவர்கள் சுட்டுவிரல் காட்டி உங்களிடம் கேள்வி கேட்பர். இது சர்வ நிச்சயம்.

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்பு

மட்டக்களப்பில் ரீ.56 ரக துப்பாக்கி-10, எஸ்.எம்.ஜி.ரக துப்பாக்கியொன்றும் கிளைமோர் குண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு பொலிஸ் பிரிவில் உன்னிச்சைக்குளம் காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரீ–56 ரக துப்பாக்கி–10, எஸ்.எம்.ஜி.ரக துப்பாக்கி–1 ஆகிய ஆயுதங்களை இராணுவத்தினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீட்டுள்ளனர்.

இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவை மீட்கப்பட்டுள்ளதாகவும் இவைகளை விடுதலைப் புலிகள் மறைத்து வைத்திருக்கலாம் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கிரான் பிரதேசத்தின் தனியார் காணியொன்றில் இருந்து கிளைமோர் குண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கிரான் வைரவன் கோயில் வீதியிலுள்ள வீட்டு வளவிலிருந்தே இந்த கிளைமோர் குண்டை ஏறாவூர் பொலிஸார் நேற்று சனிக்கிழமை காலை மீட்டுள்ளனர். வீட்டிலுள்ளோர் வளவினை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மர்மப் பொருளொன்று தென்படுவதை கண்ட வீட்டார் அவை தொடர்பில் பொலிஸாருருக்கு தகவல் வழங்கினர். இதனையடுத்தே பொலிஸார் அதனை மீட்டுள்ளனர்.

இந்த கிளைமோர் குண்டு விடுதலைப் புலிகள் அமைப்பினரால் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (எ–11)

## மாவட்ட மட்டத்தில் முதலாமிடம்



யாழ். இந்துக் கல்லூரி மாணவன் நந்தகுமார் வித்தியாசாகர் ஆங்கில மொழிமூல விஞ்ஞானப்போட்டிப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண மட்டப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (அ–7)

## சிறப்பு பட்டிமன்றம்

பண்டிதர் பொன்.சுகந்தனின் தலைமையில் யாழ். பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த சமூக சீர்திருத்த பட்டிமன்றத்தின் தலைப்பாக **இன்றைய தென்னிந்திய திரையுலகால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் ஆண்களா? பெண்களா?** என்னும் தலைப்பில் இடம்பெறவுள்ளது. (அ)

## சென்னையில் கையெழுத்து வேட்டை

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என வலியுறுத்தி பல்வேறு மாணவ அமைப்பினர் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது இலங்கைக்கு எதிராக முழக்கமிட்ட மாணவர்கள் மனிதவுரிமை மீறப்பட்டுள்ளதால் அங்கு பொதுநலவாய மாநாடு நடத்தக் கூடாது என்றும் கோஷமிட்டனர்.

இந்தியா பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என வலியுறுத்தி சென்னை மெரினா கடற்கரையில் கையெழுத்து இயக்கமும் நடத்தினர். (எ–11)

## கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை

(பருத்தித்துறை)


வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் வேலை செய்த ஒப்பந்தகாரர்கள் சிலருக்கு பல மாதங்களாக கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என ஒப்பந்தகாரர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி திணைக்களத்தில் வீதி புனரமைப்பு வேலைகளுக்கு ஒப்பந்தகாரர்கள் பல இலட்சம் ரூபாவை செலவு செய்த போதிலும் அவர்களுக்கு கீழ் பணியாற்றிய ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க முடியாது அவர்கள் அவதியுறுவதாக தெரிய வருகிறது.

எனவே, இவர்களது கொடுப்பனவுகளை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடன் நடவடிக்கை எடுக்குமாறும் வடக்கு மாகாண முதலமைச்சர் இவ்விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் ஒப்பந்தகாரர்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (அ–7–10)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### தன்னைத் தன்னால் அறிவார் சான்றோர்



நம்மிட மெல்லா நலனு முண்டு
நம்மிட மெல்லா வுலகமு முண்டு
நம்மிட மெல்லாக் கலகமு முண்டு
நம்மிட மெம்மைக் காண்பது தொண்டு

நம்மிட மென்றுங் கடவு ளுண்டு
நம்மிடம் நன்மை தீமை யுண்டு
நம்மிடம் பிறப்பு மிறப்பு முண்டு
நம்மிடம் நாக மோட்சமு முண்டு

## வாழ்வாக மாறிய நற்செய்தியை நாமும் பறைசாற்றுவோம்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இன்று நமக்குத்தரப்படும் வேதாகமப் பகுதியில் "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்"என இயேசு தம் சீடர்களுக்கு கட்டளையிடும் பகுதியைப் பார்க்கின்றோம்.

படித்ததில் பிடித்த ஒரு சம்பவத்தை இந்தவிடத்தில் பகிர்ந்து கொள்வது சாலப்பொருத்தம். ரெபெக்கா பிப்பேற் என்பவர் சர்வதேச நீதியிலேயே புகழ் பெற்ற எழுத்தாளரும் மேடைப் பேச்சாளரும் ஆவார். இவர் ஒருநாள் தன் காரில் அலுவலகம் சென்றுகொண்டிருந்தார். போகும் வழியில் மென்மையாகத் தென்றல் வீசியதால் ரெபெக்கா கார்

### பரமபிதா காட்டிய பாதை

கண்ணாடியை இறக்கிவிட்டிருந்தார். அப்போது அருகில் வந்த காரிலிருந்தவர்கள் ரெபெக்காவை நோக்கி ஏதோ ஒரு பொருளை எறிந்துவிட்டு, விரைந்து சென்று மறைந்தனர். எறிந்த பொருள் ரெபெக்காவின் முகத்தைத் தாக்கியது, மடியில் விழுந்தது. அந்த பொருள் என்னவென்று பார்த்தார். அது நற்செய்தி எண்ணங்கள் அடங்கிய ஒரு சிறு நூல் அது.

இந்நூலை எறிந்தவர்கள் நல்ல எண்ணத்துடன்தான் செயற்பட்டிருக்க வேண்டும் என்பதை ரெபெக்கா உணர்ந்தார். நற்செய்தியால் மற்றவர்களைத் "தாக்கும்" இந்த முறையை "தாக்குதல்வழி நற்செய்தி பரப்புதல்" என்று ரெபெக்கா தான் எழுதியுள்ள "உப்புக் குப்பியிலிருந்து உலகிற்கு" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதில் நற்செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்லும் வழிகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

நற்செய்தியைப் பறைசாற்றும்போது நன்மைகளும் விளைந்துள்ளன. பிரச்சினைகளும் எழுந்துள்ளன. நற்செய்தியைத் தங்கள் வாழ்வாக மாற்றிய புனிதர்கள் பலர் உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றினார்கள். வார்த்தைகள் அதிகமின்றி தங்கள் வாழ்க்கையால் அவர்கள் பறைசாற்றிய நற்செய்தியால் நன்மைகள் விளைந்தன.

ரெபெக்கா தன் கார் பயணத்தில் சந்தித்ததைப்போல, சக்தி வாய்ந்த "தாக்கும் வழிகள்" மூலம் நற்செய்தி பறைசாற்றப்பட்ட போது, பிரச்சினைகளும் எழுந்துள்ளன.

இன்றைய நற்செய்தியில் இயேசு தம் சீடர்களுக்குக் கொடுத்துள்ள கட்டளையை ஆழமாக சிந்திக்கும்போது, நமது எண்ணங்கள் முழுமையான எண்ணங்கள் அல்ல என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

"நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் " என்று இயேசு கூறிய வரிகள் எமக்கு காட்டுகின்றன. மேடைகளில், கோவில்களில் முழங்கப்படுவதோடு நற்செய்தியின் பறைசாற்றுதல் நின்று விடுவதில்லை.



வாழ்வால் பறைசாற்றுதல் எமது கடமை என உணர முடியும் என்பதை இயேசு தெளிவுபடுத்துகிறார். இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால், நாம் அனைவரும் நற்செய்தியைப் பறைசாற்றுவதற்கு அழைக்கப்பட்டுள்ளோம்.

இருபது நூற்றாண்டுகளைத் தாண்டி நற்செய்தி இன்றும் இவ்வுலகில் நடமாடி வருகிறது என்றால், இன்றும் அச்செய்தி அர்த்தம் உள்ளதாகவிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இயேசுவின் நம்பிக்கைதான்.

எனவே பல்லாயிரம் நற்செய்திப் பணியாளர்களின் வாழ்வால் நற்செய்தி இன்றும் நம்மிடையே வாழ்கிறது; வாழ்வாகிறது. வாழ்வாக மாறிய இந்த நற்செய்தியை நாமும் பரப்புவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள காற்பந்து உலக கிண்ண தொடருக்கு இங்கிலாந்து அணி தெரிவாகியுள்ளபோதும், முன்னிலை அணிகளுள் உள்ளடக்கப்படவில்லை.
தரவரிசையில் 17 ஆவது இடத்தில் இருந்து இங்கிலாந்து, போலந்துடனான வெற்றியைத் தொடர்ந்து 10ஆம் இடத்துக்கு முன்னேறியது. எனினும் உலக கிண்ண தொடரின் முதல் ஏழு அணிகளுக்குள் இடம்பெறாத நிலையில், இங்கிலாந்து தொடரில் கடுமையான போட்டிகளை சந்திக்க வேண்டி ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சச்சினின் 199 ஆவது டெஸ்ட் போட்டிக்கு 80 ஆயிரம் முகமூடிகள்



மேற்கிந்தியத் தீவுடனான கொல்கத்தா டெஸ்ட் போட்டியின்போது, ரசிகர்கள் அனைவருக்கும் சச்சின் முகம் மாதிரியில் முகமூடி வழங்க திட்டமிட்டுள்ளனர்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், சர்வதேச கிரிக்கெட்டில் சதத்தில் சதம் அடித்தவர். இதுவரை 198 டெஸ்டில் பங்கேற்றுள்ள இவர், தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் (மும்பை), சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து முழுமையாக விடைபெறுகிறார்.

இதற்கு முன் சச்சினின் 199ஆவது டெஸ்ட போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் வரும் நவ., 6 முதல் 10 வரை (எதிரணி-மேற்கிந்தியத் தீவு) நடைபெறவுள்ளது. இதை என்றும் நினைவில் நிற்கும் வகையில் மாற்ற, கொல்கத்தா கிரிக்கெட் சங்கம் (சி.ஏ.பி.,) தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, பாலிவுட் 'சுப்பர் ஸ்டார்' அமிதாப், ஷாருக்கான், மேற்கிந்தியத் தீவின் ஜாம்பவான் பிரையன் லாராவை அழைக்க சி.ஏ.பி., திட்டமிட்டுள்ளது. தவிர, இப்போட்டிக்கான டிக்கெட்டுகளில் சச்சினின் படத்தையும் சேர்த்து அச்சிடவுள்ளனர்.

### அனைவருக்கும் முகமூடி

தவிர, ஈடன் கார்டனில் போட்டி நடைபெறும் தினத்தில் வரும் ரசிகர்களுக்கு சச்சின் உருவம் பொறித்த, மொத்தம் 80,000 முகமூடிகள் வழங்கப்படுகிறது. சச்சின் துடுப்பாட்டம் செய்ய களத்தில் இறங்கும் போது, இதை அனைவரும் அணிந்து, மைதானம் முழுவதும் சச்சின் உள்ளது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முடிவு செய்துள்ளனர்.

### விற்பனை

ஈடன் கார்டனில் மொத்தம் 68 ஆயிரம் இருக்கைகள் உள்ளன. இதில் 5 சதவீதம் (3400) டிக்கெட்டுகள் இணையத்தில் விற்கப்படுகிறது. 30,000 டிக்கெட்டுகள் கௌரவ உறுப்பினர்கள், வாழ்நாள் சாதனையாளர்கள், மாநில சங்கங்கள், முன்னாள் டெஸ்ட் வீரர்களுக்கு வழங்கப்படுகிறது.

### இலவச அனுமதி

ரஞ்சி கோப்பை தொடர் (2013-2014) வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் மும்பை அணி, தனது முதல் போட்டியில் அரியானா அணியை சந்திக்கிறது. தனது கடைசி டெஸ்ட் தொடருக்கு தயாராகும் வகையில்நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், இதில் பங்கேற்கிறார். இப்போட்டிக்கு 8,000 டிக்கெட்டுகள் வரை இலவசமாக வழங்க, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) முடிவு செய்துள்ளது.


# பிபா தரவரிசையில் ஸ்பெயின் முதலிடம்

FIFA

சர்வதேச காற்பந்து போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை, சர்வதேச காற்பந்து கூட்டமைப்பு (பிபா) வெளியிட்டது.

முதலிடத்தில் 'உலக சம்பியன்' ஸ்பெயின் அணி நீடிக்கிறது. இரண்டாவது இடத்தில் இருந்த ஆர்ஜென்டீனா, 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. ஜேர்மனி அணி, இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. கொலம்பியா (4ஆவது இடம்), பெல்ஜியம் (5ஆவது), உருகுவே (6ஆவது) அணிகள் தலா ஒரு இடம் முன்னேறின. சுவிட்சர்லாந்து (7ஆவது இட்ம்), இங்கிலாந்து (10ஆவது) அணிகள் தலா 7 இடங்கள் முன்னேறின. நான்கு இடங்கள் பின்தங்கிய இத்தாலி அணி, 8ஆவது இடத்தை, ஒரு இடம் முன்னேறிய நெதர்லாந்துடன் பகிர்ந்து கொண்டது.

# சுவிஸ் டெனிஸில் நடால் இல்லை



தரவரிசையில் முதலிடத்திலுள்ள ஸ்பெயின் டெனிஸ் வீரர் நடால், இதுவரை 13 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார். இந்நிலையில், எதிர்வரும் (21-27ஆம் திகதி) சுவிட்சர்லாந்து திறந்த டெனிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இது குறித்து இவர் கூறுகையில்,

என் உடற்தகுதியில் சிறிது கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதனால், சுவிட்சர்லாந்து தொடரில் பங்கேற்க முடியாது, என்றார்,

கடந்த ஆண்டு, முழங்கால் காயத்தால் நடால் பாதிக்கப்பட்டார். இதன் பின் மீண்டும் கடந்த பெப்ரவரியில் களம் கண்ட இவர், பிரெஞ்ச், அமெரிக்க [illegible] டெனிஸ் கிண்ணங்களை வெற்றிகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# வெளியாகியது ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை

International Cricket Council

டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை டுபாயில் வெளியிட்டது. இதில் தென்னாபிரிக்காவின் ஹாஷிம் அம்லா (907) தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். அதே அணியின் டிவில்லியர்ஸ் (882) முதல் முறையாக 2ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவின் அனுபவ வீரர் சந்தர்பால் (880) 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இங்கே துடுப்பாட்ட வீரர்களும் அவர்கள் பெற்றபுள்ளிகளும்

| | | |
|---|---|---|
| 1 | ஹாஷிம் அம்லா (தெ.ஆப்.) | 907 |
| 2 | டிவில்லியர்ஸ் (தெ.ஆப்.) | 882 |
| 3 | சந்தர்பால் (வெ.இ.) | 880 |
| 4 | சங்கக்கரா (இலங்கை) | 866 |
| 5 | எம்.கிளார்க் (ஆஸி.) | 853 |
| 6 | யூனிஸ் கான் (பாக்.) | 790 |
| 7 | மிஸ்பா உல் ஹக் (பாக்.) | 783 |
| 8 | புஜாரா (இந்தியா) | 777 |
| 9 | இயான் பெல் (இங்கி.) | 748 |
| 10 | அலஸ்டர் குக் (இங்கி.) | 737 |

பந்துவீச்சாளர்களும் பெற்றபுள்ளிகளும்

| | | |
|---|---|---|
| 1 | ஸ்டெயின் (தெ.ஆப்.) | 904 |
| 2 | பிலேண்டர் (தெ.ஆப்.) | 901 |
| 3 | ஹெராத் (இலங்கை) | 831 |
| 4 | சயீத் அஜ்மல் (பாக்.) | 825 |
| 5 | ரியான் ஹாரிஸ் (ஆஸி.) | 782 |
| 6 | கிரீம் ஸ்வான் (இங்கி.) | 760 |
| 6 | பீட்டர் சிடில் (ஆஸி.) | 760 |
| 8 | அஷ்வின் (இந்தியா) | 757 |
| 9 | ஆண்டர்சன் (இங்கி.) | 741 |
| 10 | ஸ்டூவர்ட் பிராடு (இங்கி.) | 740 |

அணிகளின் தரவரிசையும் அவை பெற்ற புள்ளிகளும்

| | | |
|---|---|---|
| 1 | தென் ஆப்ரிக்கா | 3240 |
| 2 | இங்கிலாந்து | 4407 |
| 3 | இந்தியா | 3473 |
| 4 | அவுஸ்திரேலியா | 3318 |
| 5 | வெஸ்ட் இண்டீஸ் | 2168 |
| 6 | பாகிஸ்தான் | 2133 |
| 7 | இலங்கை | 2295 |
| 8 | நியூசிலாந்து | 2126 |
| 9 | சிம்பாப்வே | 372 |
| 10 | வங்கதேசம் | 135 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்னர் அதிரடி

# இந்தியாவை வீழ்த்தி ஆஸி திரில் வெற்றி



பாக்னரின் அதிரடியான ஆட்டம் மூலம் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 3-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி மொகாலியில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 303 ஓட்டங்கள் குவித்தது. அணித் தலைவர் தோனி 139 ஓட்டங்கள் விளாசி கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

விராட் கோலி 68 ஓட்டங்கள் சேர்த்தார். அவுஸ்திரேலியா தரப்பில் மிட்செல் ஜோன்சன 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதையடுத்து 304 ஓட்டங்கள் என்ற இலக்கைத் துரத்திய அவுஸ்திரேலியாவுக்கு

ஹக்ஸ்-பிஞ்ச் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்கள் சேர்த்தது. 68ஓட்டங்கள் சேர்த்த நிலையில் இந்த ஜோடியைப் பிரித்தார் வினய் குமார். அவரது பந்துவீச்சில் ஹக்ஸ் (22 ஓட்டம்) ஆட்டமிழந்தார். 38 ஓட்டங்கள் அடித்த பிஞ்ச், இஷாந்த் சர்மா ஓவரில் விக்கெட்டை இழந்தார். அதன்பின்னர் வோட்சன் (11), மேக்ஸ்வெல் (3), ஹேடின் (24) ஆகியோர் சோபிக்கவில்லை. நிதானமாக ஆடிய அணித்தலைவர் பெய்லி 43 ஓட்டங்களில் பவிலியன் திரும்பினார். இதனால் அவுஸ்திரேலியா 213 ஓட்டங்களில் 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான நிலையில் களத்தில் இருந்த வோக்ஸ்-பாக்னர் ஜோடி, விக்கெட் வீழ்ச்சியை கட்டுப்படுத்தியதுடன், அணியை சரிவில் இருந்து மீட்டது. வோக்ஸ் அரை சதம் கடந்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். ஆனாலும் இந்தியாவின் பக்கம் தான் வெற்றி வாய்ப்பு இருந்தது. அப்போது அதிரடியாக ஆடிய பாக்னர் ஆட்டத்தின் போக்கை மாற்றினார்.

47 ஓவர் முடிவில் அவுஸ்திரேலியா அணியின் வெற்றிக்கு 44 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இஷாந்த் சர்மா வீசிய 48-வது ஓவரில் சிக்சர்களாக விளாசிய பாக்னர் 30 ஓட்டங்கள் குவித்தார். இதனால், அவுஸ்திரேலியாவை வெற்றிப்பாதைக்கு திரும்பியது. 49-வது ஓவரில் 5 ஓட்டங்கள் எடுத்தனர்.

கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், முதல் பந்தில் வோக்ஸ் ஒரு சிங்கிள் அடித்து மறுமுனைக்கு சென்றார். அடுத்த பந்தில் 2 ஓட்டங்கள் அடித்த பாக்னர், 3-வது பந்தில் அதிரடியாக சிக்சர் விளாசி வெற்றியை உறுதி செய்தார். இதனால் 3 பந்துகள் மீதமிருந்த நிலையில் 4 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. வோக்ஸ் 76 ஓட்டங்களுடனும் பாக்னர் 64 ஓட்டங்களுடனும் (29 பந்துகள், 2 பவுண்டரி, 6 சிக்சர்) களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலியா 2-1 என முன்னிலை பெற்றுள்ளது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்ரேலிய அணியின் பாக்னர் தெரிவானார்.

4-வது போட்டி எதிர்வரும் 23-ம் திகதி ராஞ்சியில் நடக்கிறது



## மன்மோகன்...

தியிருந்தன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அரச தலைவர்கள் அனைவரும் இம்மாநாட்டில் பங்கேற்பார்கள என்ற எதிர்பார்ப்பு எமக்கு இருக்கின்றது" என்று இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.(எ-11)

## மாங்குளத்தில்...

நடைபெற்றமைக்கு வரலாறுகள் உள்ளதாகவும், முப்பது ஆண்டு கால யுத்தத்தினால் அவை சிதைவடைந்துவிட்டதாக ஹிங்குராகந்தே சுமன தேரர் இந்நிகழ்வின்போது தெரிவித்துள்ளார். (எ-11)

## அத்துமீறும் சிங்கள...

அழைத்து, சிறிய குல்லா மூலம் கடலுக்குள் ஏற்றிச் சென்று சம்பவத்தை நேரில் காண்பித்துள்ளனர். இதன்போது சுமார் 15தொடக்கம் 25 குதிரை வலுவுள்ள இயந்திரங்களை பூட்டி கடற்றொழிலில் ஈடுபட்டிருப்பதை அவர் நேரில் பார்வையிட்டுள்ளார்.

இதனையடுத்து, அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த சிங்கள மீனவர்களை அருகில் வருமாறு மாகாண சபை உறுப்பினர் அழைத்த போதும் அவர்கள் அருகில் வராமல் அந்த இடத்திலிருந்து சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தினை நேரடியாக வடக்கு மாகாணசபை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் எனவும் விரைந்து இந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் து.ரவிகரனிடம வலிந்து கேட்டுள்ளனர்.(எ-11)

## யாழிற்கு இரணைமடு...

பொறியியலாளர் பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விவசாய அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்தத் திட்டத்தினால் ஏற்படப்போகின்ற விவசாயச் செய்கைக்கான பாதிப்பு, கிளிநொச்சி மாவட்டத்தின் குடிநீர்த் தேவை உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும், இந்தக்குடிநீர்த் திட்டம் தொடர்பிலான ஒப்பந்தத்தில் விவசாயிகளைப் பாதிக்கத்தக்க வகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கருதும் விடயங்களையும் சுட்டிக்காட்டி, இந்த சிக்கல்களுக்கு வடமாகாண சபை நல்லதொரு தீர்வைக்காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

குடிநீர்த்திட்டம் தொடர்பான விபரங்கள், இதுவரையில் நடைபெற்றுள்ள வேலைகளின் நிலைமைகள் குறித்து அதிகாரிகள் எடுத்துக் கூறினர்.

இதனையடுத்து, இந்த விடயம் குறித்து வடமாகாண சபை செயற்படத் தொடங்கியதும் உடனடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக் கப்படும் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.(எ-11)

## உதைபந்தாட்ட இன்றைய போட்டி

வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை ஐக்கியம் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் அணியும் மோதவுள்ளன. (24)

## இராணுவத்துக்கு இடவசதி...

ணுவ வீரர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவை தொடர்பில் எந்த அமைப்புகளோ அல்லது சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவோ பேசத் தயாராக இல்லை.

அதேபோல் தற்போது வடக்கில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டி வலியுறுத்தினால் எமது இராணுவத்தினர் வாழ்வதற்கான இன்னொரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அரசாங்கம் இராணுவத்திற்கான இடவசதிகளையும் வாழ்வாதார வசதிகளையும் பெற்றுத் தருமானால் நாம் வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவோம் எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (எ-11)

VACANCY - RECEPTIONIST

As a Receptionist, you are expeted to be energetic, depandable, Customer oriented and able to learn quickly

Eligibility To be successfull you will need to possess:

- Age 18-35
- Two Passes at the GCE A/L
- Computer Literate
- Strong communication skills, fluent in TAMIL / ENGLISH knowledge of SINHALA advantage.
- Work finishes - 6.15 pm
- Day off - 1 day during week days. Required to work the Sat & Sun.
- DS Division - Residents from Jaffna, Nallur & Kopay Only.

The ideal condidates will be 22-35 years of age and can look foward to a rewarding career with a clear path towards personal and professional success couple with advanced training opportunities and an attractive remuneration package, Interviews will be on sunday / Monday 5-6 pm. (20/10/13, 21/10/13)

THISAIKADDI (Pvt) LTD,
#175, POINT PEDRO ROAD, JAFFNA. 021 221 9016 - 021 5689090

(C-5234)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## English from Junior to Adult & Kids care

| Level | Grade | Age |
|---|---|---|
| Junior | Gr-1, 2 | 5+,6,7yrs |
| Intermediate | Gr-3, 4, 5 | 8, 9, 10 yrs |
| Higer.Inter | Gr-6, 7, 8, 9 | 11, 12, 13yrs |
| Senior | Gr-10, 11, 12 | 14 - 18 yrs |
| Adult | 19 yrs & above | |

We also provide
*Infant/Toddler care*
*Mon - Fri - 7.30 - 5.30*
*Kid care*
*Mon - Fri - 12.30 - 5.30*
Admissions open from 15th Oct

Toddlers are tricky!
To help you navigate the toddler years we offer a
*a stimulating curriculum
*well supervised environment
*best toys for each age group
&
*age-appropriate activities

Listening, Speaking, Reading and Writing are "Macro" skills of a language and grammar, vocabulary, spelling and pronunciation are "micro skills!! Our English syallabus is set to cover both macro & micro skills!

(சி/5216)

Visalam
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-5218)

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். *(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 ,0212220393



### வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களான (கிராண்பாஸ், வத்தளை, மட்டக்குளி, நிட்டம்புவ, [illegible]ரஹேன்பிட்டி, நாவல, ஹோமாகம, பியகம, சப்புஸ்கந்த களனி பிரதான தொழிற்சாலைகளில் ஜேம், தேயிலை, காமெ[illegible]ட், சீமெந்து, பெயின்ட், Cargills போன்ற தயாரிப்புகளுக்கு உ[illegible]த்தி லேபல் பொதியிடல் பிரிவுக்கு 17-50 ஆண்-பெண் தேவை. உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் சம்பளம் 18,000/-, 32,000/- (நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொ[illegible]ழிற்சாலையில்) வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு

**தொடர்பு: 0778430179**

(சி-5219)



கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடங்கள். கொழும்பு, திருகோணமலை, விசுவமடு, பாசிக்குடா, கம்பஹா, நுவரெலியா, பிரதேசங்களில் மேசன்/செடலின்பாஸ், பெயின்டர், இலற்றிசன், தச்சு (1200/- மேல்) கைஉதவியாளர் (900/-மேல்) வாரச் சம்பளம். மாதாந்த சம்பளம் மற்றும் தினமும் கை செலவு பணம் உண்டு

**0775561883**



நிரந்தர தொழில் 18-50 வயது உடையவராய் நிரந்தர தொழில் கப்பல் புனர்நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள் வெல்டர், தச்சு மெக்கானிக் தேவை. மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர், கேட்டரிஸ், லோன்றி போன்ற பிரிவுக்கு 18-50 ஆண் - பெண் வெற்றிடங்கள். உணவு, தங்குமிடம் வசதிசெய்து தரப்படும். சம்பளம் (தொழில் அடிப்படையில்), 18000/-, 40000/-விரைவாக தொடர்புகளுக்கு முந்துங்கள்.

**தொடர்பு: 0775561883**

(சி-5220)



### பிரத்தியேக கணினி வகுப்பு

*உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
*DTP(Photoshop CS5, CorelDraw X4, PageMaker) Ms office, Internet & E-mail, Web Design.
*சிறுவர்களிற்கான கற்கைநெறி-(ஆண்டு 1-6)
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும் 10வருட அனுபவம்
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.

TP:0779672038 ஆசிரியர்:KRC



உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர தொழில் 18000/-, 25,000/-, 32,000/- கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் தொழிற்சாலைகளில் பல வெற்றிடங்கள் ஜோம், கோடியல், பிஸ்கட், தேயிலை, PVC கிளவுஸ், சோயா பொலித்தீன், பெயின்ட், காமென்ட், சொலட் பிளாஸ்டிக் போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி உதவியாளர், லேபல், தரம்பிரித்தல், களஞ்சியப் பிரிவு, Loding, unloding பிரிவுக்கு 17 -50 வயது ஆண், பெண், தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலையில் (நண்பர்கள், குழு ஒரே தொழிற்சாலையில் ஒரே அறையிலும்)

**இன்றே தொடர்பு : 0777117661, 0775583806**



### தேவை

லண்டனில் 72 வயதான ஆரோக்கியமான ஒருவரைக் கவனிப்பதற்கு ஒருவர் தேவை. பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத தாதி விரும்பத்தக்கது

முழு விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்தில் விண்ணப்பிக்கவும்

தவம் - 68 Burges Road, London E6 2BH England

(4186)


## நவம்பர் ஐ.நா...

மனித உரிமை நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் தலா 3 நாடுகள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளன.

மேலும் சில நாடுகளுக்கு எதிராக கால மீளாய்வுக் கூட்டத் தொடரின் போது பிரேரணைகளும்தாக்கல்செய்யப் படவுள்ளதாகவும் கூட்டத் தொடர் ஆரம்பமாகி 2-வது வாரத்தின் இறுதிப் பகுதியில் இந்த பிரேரணைகள் முன்வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2012-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மனித உரிமைப் பேரவையின் 16-வது பூகோள கால மீளாய்வுக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-11)


University of Bedfordshire

**Study in the UK**
**Great location:** 30 minutes from London
*** Merit Scholarships Available**

- Top 10 University for International Students
- Honorary Doctorate given to Actor Shah Rukh Khan
- Queen's Award for Enterprise : International Trade 2011
- Award: International Student Recruitment Team of the Year 2009

www.beds.ac.uk

**Spot Admissions for February 2014 Intake**

**Postgraduate / Undergraduate Courses**
MBA / Business & Management / Computing / Finance & Accounting / HRM Engineering / Pharmacology / Public Health / Art & Design / Biotech / Education Information Systems / Media / Marketing / Law / Nursing / Psychology / Tourism.

**To find out more meet our Regional Representative Mr Jagat Patel & Regional Officer**

| | |
|---|---|
| Date: 23 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Thames International<br>136 B 1/1 High Level Road,<br>Nugegoda 10250, Sri Lanka<br>**Tel No**: 011 431 9027 / 0714 16 0178 | Date: 23 October 2013<br>Time: 3.00 - 5.30 pm<br>Venue: ICBT Study Abroad<br>R A De Mel Mawatha<br>(Opp. British Council), Colombo.<br>**Tel No**: 0773 442628 |
| Date: 24 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Loho Group Office<br>Lucky Plaza Building. 4/7, 4th Floor<br>St. Anthony's, Mawatha, Kollupitiya.<br>**Tel No**: 0777 917929 / 0773 498660 | Date: 24 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Achievers International<br>[UCAS Visa Center] W.A. Silwa Mw,<br>Colombo 06,Wellawatha ,Srilanka.<br>**Tel No**: 0779 568350 / 0777 887050 |
| Date: 24 October 2013<br>Time: 3.00 - 5.30 pm<br>Venue: Australian Busi. Edu. Centre<br>No 10 A, Rotunda Garden,<br>Colombo 03, Sri Lanka.<br>**Tel No**: 0770 692940 / 0773 265931 | Date: 25 October 2013<br>Time: 11.00 - 1.30 pm<br>Venue: Campus Direct<br>No: 102 A Horton Place<br>Colombo 7, Sri Lanka.<br>**Tel No**: 077 824 6666 / 072 222 3522 |

**Please Bring your Academic Documents for Spot Admission to the Venue**



யாழ். மாவட்ட
### பேக்கரி உரிமையாளர் சங்கம்
T.P.: 021 222 3814

### லொறி ஏல விற்பனை

எமது சங்கத்தின் பாவனையிலுள்ள லொறிகள் 2013.10.24ந் திகதி அன்று முற்பகல் 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளது. இந்த லொறிகளை கொள்வனவு செய்பவர்களுக்கு எமது சங்கத்தின் பேக்கரிகளுக்கான மா விநியோகம் (மா ஏற்றி இறக்கும் பணி) நிபந்தனை அடிப்படையில் குறித்த காலத்துக்கு வழங்கப்படும்.

எமது அலுவலகத்தில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை தினமும் லொறிகளைப் பார்வையிடலாம். கொள்வனவு செய்ய விரும்புவோர் எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து 24.10.2013 அன்று முற்பகல் 10.00 மணிக்கு முன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நெறியாளர் குழு கட்டளைப்படி
கா.பாஸ்கரன்,
செயலாளர்.

(சி-5228)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 21.10.2013 | 26.10.2013 | 28.10.2013 | 02.11.2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpuliyamkulam, Vavuniya.

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, [illegible]

(சி-5216)



## Jet D Express
### Courier Service




| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 650/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..

Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்

(C-5230)

இல. 27, முதலாம் மாடி,
[illegible] (றொம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301

No. 77E, Manning Place,
Wellawatta, Colombo - 06.
T.P : 0112363873, 0776509909.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.